பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை12 திங்கட்கிழமை(27-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:01

# லண்டனில் சந்திரிகா பல தரப்பினருடனும் தீர்வு குறித்துப் பேச்சு

கொழும்பு,நவம்பர்27

**தற்போது லண்டனில் தங்கியிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் குறித்து அங்கு பல நாட்டுப் பிரமுகர்களுடனும் விரிவாகப் பேச்சு நடத்துவார்.**

**சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றார்.**

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வியாழக்கிழமை லண்டன் போய்ச் சேர்ந்தார்.

அவர் அங்கு தங்கியிருக்கும் காலத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் குறித்து பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்தவிருக்கின்றார்.

பிரிட்டிஷ் அரசியல் தலைவர்களுடன் முதலில் அவர் பேச்சு நடத்துவார் என்றும் -

அதைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடன் அவர் பேசுவார் என்றும் -

அந்த சிரேஷ்ட அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான விவகாரம் சர்வதேச நாடுகளின் கவனத்தைத் தற்சமயம் வெகுவாக ஈர்த்துள்ள நிலையில் ஜனாதிபதியின் தற்போதைய லண்டன் விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் -

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான முதற்கட்டப் பேச்சுக்கள் அடுத்தவாரம் ஒஸ்லோவில் நடைபெறும் சாத்தியக் கூறுகள் உள்ளதாக ஒஸ்லோவில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிப்பதாக அரச சார்புப் பத்திரிகை ஒன்று நேற்று தகவல் வெளியிட்டுள்ளது.

(உ-3)

## பல தரப்பினரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும்

# பிரபாவின் மாவீரர்தின உரை இன்று மாலை ஒலிபரப்பாகும்

வவுனியா,நவ.27

இலங்கை அரசாங்கமும், மக்களும், சர்வதேச சமூகமும் ஆவலுடன எதிர்பார்த்திருக்கும் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர்தின உரை இன்று மாலை 5.45 (புதிய நேரம் 6.15) மணிக்கு இடம்பெறவிருக்கிறது.

தற்போது இடம்பெற்று வரும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முயற்சிகளின் பின்னணியில், தலைவர் பிரபாகரனின் இன்றைய உரை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

சமாதானப் பேச்சுக்கான வாய்ப்புகள், முன்நிபந்தனைகள், பேச்சில் புலிகளுக்கு உள்ள ஈடுபாடு, யுத்த நடவடிக்கைகள் தொடர்பான புலிகளின் நம்பிக்கை ஆகியன உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து தமது கருத்தை இந்த உரையில் தலைவர் பிரபாகரன் வெளிப்படுத்துவார் என்று சர்வதேச சமூகம் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

தலைவரின் மாவீரர் உரை மற்றும் அதன் பின் இடம்பெறும் நிகழ்ச்சிகளை நேரடியாக அஞ்சல் செய்வதற்காக 'புலிகளின் குரல்' வானொலியின் விசேட சேவை இன்று நேரத்

(10ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திரம் கிடைக்கும் வரை விடுதலைப் போர் தொடரும்

## ஆங்கில வார இதழுக்கு அளித்த பேட்டியில் தமிழ்ச்செல்வன்

கொழும்பு,நவ.27

"சுதந்திரத்தை எங்கள் மக்கள் அடையும்வரை விடுதலைப் போராட்டம் தொடரும்" என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

தனிப்பட்ட செய்தியாளரான உபுல ஜோசப் லண்டன் மூலமாக வன்னியுடன் தொடர்புகொண்டு சு.ப.தமிழ்ச்செல்வனிடமிருந்து பெற்றுக்கொண்ட பிரத்தியேகப்பேட்டி கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் நேற்று வெளியாகி இருந்தது.

அந்தப் பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தப் பேட்டியின் சில கேள்வி பதில்கள் இங்கு வெளியாகின்றன. அவை வருமாறு-

***கேள்வி:*** யாழ்ப்பாணத்துக்கும் சமாதான முயற்சிகளுக்கும் உள்ள தொடர்பு என்ன? சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற கொள்கை முடிவு ஏதும் உண்டா? உங்களால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முடியுமா?

***பதில்:*** எந்தச் சமாதான முயற்சி வெற்றி பெறுவதானாலும், யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாமல் முழுத் தமிழர் தாயகத்திலுமே வசிக்கும் தமிழ் மக்கள் இயல்பு நிலை திரும்பி விட்டதாக உணரும் சூழல் ஏற்பட வேண்டும். அதாவது எந்தவித பயமும் அச்சுறுத்தலும் இன்றி அமைதியாகத் தாங்கள் வாழமுடியும் என்று அவர்கள் உணரும் சூழ்நிலை ஏற்படுத்தப் படவேண்டும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# பதில் பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பு பிரதமர் வசம்!

கொழும்பு,நவ.27

வெளிநாடு சென்றிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தம்மிடம் உள்ள பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பை பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவிடம் ஒப்படைத்துச் சென்றுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய, பதில் பாதுகாப்பு அமைச்சராகப் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்

(9ஆம் பக்கம் பார்க்க)




15 வருடங்களுக்கு முன் உதயனின் முதலாவது இதழ்

## அன்புசால் வாசகர்களே!

உங்களின் பேரன்புக்கும் பேரபிமானத்துக்கும் ஆளான உதயனுக்கு இன்று பதினைந்தாவது அகவை நிறைவு நாள். உதயனின் சிறப்புக்குரிய வளர்ச்சியில் எங்களோடு சேர்ந்து பங்குகொண்ட உங்களோடு, பிறந்தநாள் பூரிப்பைப் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்வடைகிறோம்.

ஒரு பத்திரிகை தனது வளர்ச்சியில் பதினைந்து வருடங்களைக் கடந்து வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அதுவும் பத்திரிகை அச்சிடுவதற்கான வளங்கள், வசதிகள் குறைந்த, போர்ச் சூழ்நிலைக்குள் சிக்குண்டுள்ள யாழ்ப்பாணத்தில் இருந்து நாளேடு ஒன்றைத் தொடர்ந்து வெளியிடுவது என்பது இலகுவான பணியன்று.

எனினும் -

யாழ்ப்பாண மக்களின் குரலாக உலகத்தவர்கள் யாழ்ப்பாணத்தைப் பார்க்க உதவும் சாளரமாக அமைந்து உழைக்க வேண்டும் என்ற வேணவாக் காரணமாக, பல கஷ்டங்கள், சோதனைகளின் மத்தியிலும் உதயன் சோர்வின்றி வெளிவருகிறான்.

நடுவுநிலைமை நாளிதழ் ஒன்றுக்குரிய குணாம்சத்துடன், பத்திரிகா தர்மத்திலிருந்து வழுவாது மக்கள் சேவை ஆற்ற வேண்டும் என்பது உதயனின் இலக்கு. உரிமைகளைப் பெறத் துடிக்கும் ஓர் இனமாக, அடக்குமுறைக்கு உட்பட்ட ஓர் இனமாக வாழும் தமிழ் மக்களின் விடிவுக்கு உழைப்பதும் உதயனின் இலட்சியம்.

இவற்றை எய்தும் வகையிலும் மக்களுக்குத் தகவல் சொல்வதுடன் அறிவு தரும் பணியை ஆற்றும் வகையிலும் உதயன் கடந்த மூவைந்து ஆண்டுகளாக தனது பணிகளை உறுதியுடன் நிறைவேற்றியதை வாசகர்களாகிய நீங்கள் நன்கறிவீர்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தமிழ்த் தேசியப் பத்திரிகை என்ற வகையில் உதயன் சமூகப் பொறுப்புணர்வுடன் மக்களுக்குச் சேவையாற்றி வந்துள்ளது என்பதனையும் நீங்கள் நிச்சயம் அங்கீகரிப்பீர்கள்.

மக்களின் நலன் கருதி உழைப்பதால், கடந்து வந்த பதினைந்து ஆண்டுகளும் உதயனுக்கு உண்டான இடுக்கண்கள், நெருக்கடிகள், பயமுறுத்தல்கள், தடைகள் மிகப பலப்பல. அவற்றுக்கு மத்தியிலும் வாசகர்களாகிய உங்களின் பக்கபலத்துடன் நாம் தளர்வின்றிச் செயற்படுகிறோம்; நிமிர்ந்து நிற்கிறோம்.

இவ்வருடம் மே, ஜூன் மாதங்களில் உதயன் மீது தடை விதிக்கப்பட்டதையும், அதனைப் பயன்படுத்தி சில சக்திகள் நசுக்க முயன்றதையும் நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். நீங்கள் தந்த தார்மீகப் பலமும், இறையருளும் உதயன் மீண்டும் எழுந்து ஒளிவீச உறுதுணையாகின.

மிகுந்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சிறப்பான செய்திகளை வழங்கியதற்கான 'கௌரவ விருது' தடைசெய்யப்பட்டிருந்த காலத்திலேயே உதயனுக்குக் கிடைத்திருந்தது. இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் அவையின் இந்த விருது உதயனின் சிறப்பான செய்திச் சேவைக்குக் கிடைத்த பரிசாகும். கடந்த வருடம் போலவே இம்முறையும் விருது பெற்றமை மக்களுக்கு ஆற்றும் பணியை, சேவையை மேலும் ஊக்குவிக்கத் தூண்டுதலாக அமைகிறது.

எந்தக் காலத்திலும், எந்தச் சூழலிலும் உதயனின் வளர்ச்சியின் கொழுகொம்பாகத் திகழ்பவர்கள் வாசகர்களாகிய நீங்களே. உங்களது ஆதரவும், அன்பும், அபிமானமும் கடந்த பதினைந்து ஆண்டுகளைப் போலவே தொடரவேண்டும் என அன்பு கூர்ந்து வேண்டுகிறோம். உங்கள் ஆதரவே உதயனின் பலம்.

உங்களது பொலிந்த ஆதரவு என்ற விளைநிலத்தில் நின்று, மக்களின் மனதையும் அறிவையும் உயர்த்தும் அதேவேளை, அவர்களுக்குப் பக்கத் துணையாக நிற்கும் உன்னத பணிகளை இளைஞனாகிவிட்ட உதயன் தனது பதினாறாவது வயதில் மேலும் உத்வேகத்துடனும் சீராகவும் சிறப்பாகவும் ஆற்றுவான்.

எமது வளர்ச்சியில் பெரும் பங்குகொண்டு உதவிய அன்பு வாசகர்கள், விளம்பரதாரர்கள், செய்தியாளர்கள், எழுத்தாளர்கள், விநியோக முகவர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள் அனைவருக்கும் இன்றைய மங்கள நாளில் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உதயமான நாள் தொட்டு உதயன் தனக்குள்ள பன்முகப் பணிகளைப் பொறுப்புணர்ந்து பழுதிலாத் திறத்துடன் இயற்ற உறுதுணையாக, உந்து சக்தியாக விளங்கும் இறைவனின் அளவிலாப் பேரருட் கருணையை இதயத்தில் பதித்து, அவனது நலம் நல்கும் பாதங்களைப் பணிந்து இறைஞ்சுகிறோம்.

வணக்கம்.

- நிர்வாகத்தினர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## றோயல் முன்னணி

கொழும்பு,நவ.27

நேற்றுமுன்தினம் கொழும்பில் வெளியாகிய ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி கொழும்பு மாவட்டத்தில் றோயல் கல்லூரி முன்னணி இடத்தைப் பெற்றுள்ளது.

அக்கல்லூரியில் இருந்து தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளின் மூலம் இந்தப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில 49பேர் மூன்று பாடங்களிலும் விசேட சித்தி (A) பெற்றுள்ளனர். (உ-7)

# மட்டக்களப்பில் மேலும் அதிரடிப்படை குவிப்பு!

மட்டக்களப்பு,நவ.27

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் நேற்றுமுன்தினம் முதல் மேலும் ஆயிரத்து ஐந்நூறு விசேட அதிரடிப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப் பட்டிருப்பதாக விசேட அதிரடிப்படையின் கட்டளைத் தளபதியும், பிரதிப் பொலீஸ்மா அதிபருமான நிமல் குணத்திலக்க தெரிவித்துள்ளார்.

இராணுவத்திடம் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பைப் பொறுப்பேற்றுள்ள விசேட அதிரடிப் படையினர், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் புதிய முகாம்களையும், காவலரண்களையும் அமைத்து வருகின்றனர் என்றும் -

சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சரத் சில்வாவிடம் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் -

கட்டளைத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-7)

## ஆசிரியர்களுக்கு செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர் மத்திய நிலையத்தினால் வலய பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான தொடருறு கல்வி சம்பந்தமான செயலமர்வுகள் நாளை செவ்வாய்கிழமை தொடக்கம் டிசெம்பர் முதலாம் திகதி வரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

பாட மட்டக் கணிப்பீடு, விஞ்ஞான உபகரணங்கள் தயாரிப்பு, செயற்பாட்டறைப் பயன்பாடு ஆகியவை பற்றிய செயலமர்வுகள், நடத்தப்படவுள்ளதால் ஒவ்வொரு பாடசாலைகளில் இருந்தும் பொருத்தமான இரு ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.(இ-117)

## பஸ்ஸிலிருந்து குண்டு மீட்பு

கொழும்பு,நவ.27

சிலாபத்துக்கும், நீர் கொழும்புக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் போக்குவரத்துச் சபையின் பஸ். சிலாபம் பஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சமயம் அதிலிருந்து பத்து கிலோ குண்டு மீட்கப்பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் மீட்கப்பட்ட இந்தக் குண்டு பின்னர் குண்டு செயலிழக்கும் பொலீஸாரால் செயலிழக்கச் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் தேடுதல் இடம்பெற்றது(இ-3)

## வீடுகள் அமைப்பு

காரைநகர்,நவ.27

'போரூட்' நிறுவனத்தினால் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட எழுவைதீவில பத்து புதிய வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாக எழுவைதீவு கிராம உத்தியோகத்தர் இ.இராசதுரை தெரிவித்தார்.

இந்த வீடுகள் ஒவ்வொன்றும் தலா 30 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருவதாகவும் வீடுகள் அமைக்கும் பணி பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-73)


ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை, சுன்னாகம்.
க.பொ.த. (உ.த.) பரீட்சை 2000
சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை
பாராட்டி வாழ்த்துகின்றோம்

**விஞ்ஞானம்**

| | | |
|---|---|---|
| 1. | S.வித்தியகுமார் | - 2A, C |
| 2. | N.[illegible]மஸ் | - A,2B,C |

**வர்த்தகம்**

| | | |
|---|---|---|
| 1. | L.ரமா | - A,B,C |
| 2. | T.தனுஷா | - A,B,C |
| 3. | K.சசிலேகா | - 2A,2B |
| 4. | B.பாலச்சந்திரன் | - A,3B |
| 5. | S.கமல்ராஜ் | - A.2B,C |
| 6. | Y.ஜான்சி சுதர்மதி | - A,2B,C |
| 7. | R.றொபின் ஜெயரூபன் | - 4B |


**கலை**

| | | |
|---|---|---|
| 1. | S.ரமேஸ்குமார் | - 2A,B |
| 2. | S.திருக்குமரன் | - 2A,B |
| 3. | I.குவல்ற்றினா | - 2A,B |
| 4. | L.சியாமளா | - 2A,B |
| 5. | T.பவித்ரா | - 2A,C |
| 6. | S.குணசீலன் | - A,2B |
| 7. | K.கஜந்தன் | - A,B,C |
| 8. | S.ராதிகா | - A,B,C |
| 9. | V.சுவிந்தா | - A,B,C |
| 10. | S.விஜயகௌரி | - A,B,C |
| 11. | B.ஸ்கந்தராஜ் | - 3B |
| 12. | S.துர்சினி | - 3B |
| 13. | A.பிரதீபா | - 2A,2B |
| 14. | M.லதா | - 2A,2B |
| 15. | J.ஜெயராஜ் | - 2A,2B |
| 16. | P.ஷாமினி | - A,3B |
| 17. | R.நெடுஞ்சேரலாதன் | - A,3B |
| 18. | A.பஸ்ரியன் | - A.2B,C |

ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்,
கனடா.
(80932)



# கண்ணீர் அஞ்சலி



புதிய உயர் கல்லூரி மாணவன்
**அமரர் செல்வசிவம் செல்வகுமார்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

B.A Part I
மாணவர்கள்,
புதிய உயர் கல்லூரி.
(C/13991)



IIS இன் கணனிக்கற்கைநெறிகளுக்கான
புலமைப்பரிசில் திட்டம் - 2001
5000 மாணவர்களுக்கு

**விண்ணப்ப முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது**

மேற்படி திட்டத்தில் வடபகுதியில் இருந்து ஏராளமான மாணவர்கள் ஆர்வம் காட்டி வருவதாலும், மாணவர்கள், பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் விண்ணப்ப முடிவுத்திகதி 25/11/2000 இல் இருந்து 24/12/2000 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இயக்குனர்,
IIS, யாழ்ப்பாணம்.



**லஷ்சுமி சினிமா**
இணுவில்
இன்று முதல்...
மாதவன், ஷாலினி
நடித்த
**அலைபாயுதே**
(றீலஸ்)
காட்சிகள்
10.30, 2.30 (ப.நேரம்)
(80928)



**நாகம்ஸ்** சுன்னாகம்
அர்ஜுன், ரோஜா,
ரம்பா, ஆனந்தராஜ்
நடித்த
**அடிமைச்சங்கிலி**
(றீலஸ்) காட்சிகள் – 11.00, 2.30 (பு.நே.
13993



**ராஜா** யாழ்ப்பாணம்
விஜய், சிம்ரன்,
மணிவண்ணன்
மற்றும் பலரின் நடிப்பில்
இனிய பாடல்கள் கொண்ட
**துள்ளாத மனமும் துள்ளும்**
காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)
(C/13648)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பத்மாதேவி பாலச்சந்திரன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியாவில் வசித்து வருமான திருமதி பத்மாதேவி பாலச்சந்திரன் நேற்றுமுன்தினம் (25.11.2000) சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் பொன்னுத்துரை - சரஸ்வதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற நமசிவாயம் - சிவபாக்கியம் தம்பதிகளின் (சூராவத்தை) அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலச்சந்திரனின் (புகைப்படப் பிடிப்பாளர்) அன்பு மனைவியும், லக்ஷணாவின் அன்புத் தாயாரும், கமலாதேவி, காலஞ்சென்ற தவராசா மற்றும் விமலாதேவி (முதன்மை ஆசிரியர், சங்கீதம் - வலிகாமம் கல்வி வலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகலிங்கம், நாகேஸ்வரன், (வெளிக்கள உத்தியோகத்தர், மலேரியா தடுப்பு இயக்கம் - சங்கானை) ஆகியோரின் அன்பு மைத்துனியும், திவாகரன், சசிகரன், ஜோதிகரன், கிரிஷங்கர், அமிர்தா, கிரிஷயன், மதுரா, கிரியுகன் ஆகியோரின் அன்புச் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியா இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**விமலாதேவி நாகேஸ்வரன்**
**(சகோதரி)**

*மான்ஸ் பாடசாலை வீதி,*
*உடுவில்.*
(80925)

## திருமதி சிவகுருநாதர் வள்ளிநாயகி

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகுருநாதர் வள்ளிநாயகி நேற்று (26.11.2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இரகுநாதர் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சிவகுருநாதரின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2000) திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அவரது தற்காலிக வதிவிடமாகிய பத்தமேனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
**பொன்னையா பாலசிங்கம்**
**(மருமகன்)**

*யூனியன் வளவு,*
*பத்தமேனி,*
*அச்சுவேலி.*
(80926)

## திருமதி யோகம்மா காங்கேசு

('அருணா' பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு)

உரும்பிராய் தெற்கைச் சொந்த இடமாகக் கொண்ட திருமதி யோகம்மா காங்கேசு நேற்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை காங்கேசு (இளைப்பாறிய பிரதம இலிகிதர், நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை - யாழ்ப்பாணம்), அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முத்துத்தம்பி - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், ஜெயந்தி (கொழும்பு), தயாபரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திவாகரன (கணேசா ஸ்ரோர்ஸ், கொழும்பு) அவர்களின் அன்பு மாமியும், காலஞ்சென்ற அருணாசலம், மலர்மணி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நடராசா, சபாநாதன் ஆகியோரின் மைத்துனியும ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2000) ஞாயிற்றுக்கிழமை கொழும்பு கல்கிசை மயானத்தில் நடைபெறும்.

*NO 15, GLIFORD PLACE.*
*COLOMBO - 04.*
(80929)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## திருமதி செல்லத்துரை செல்லம்மா

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை செல்லம்மா 21.11.2000 செவ்வாய்க்கிழமை முரசுமோட்டை பரந்தனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், யோகேஸ்வரி, கமலானந்தன் (நீர்பாசனத் திணைக்களம் -யாழ்ப்பாணம்) கமலேஸ்வரி, சற்குணநாதன் (ஜேர்மனி), அற்புதநாதன் (ஜேர்மனி), கருணேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நவநீதராசா, இராசமலர், வேவி, காலஞ்சென்ற பத்மநாதன், மைதிலி, பாக்கியலிங்கம், (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.11.2000 புதன்கிழமை பரந்தனில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**செ.கமலநாதன்** (மகன்)

*தற்போதைய முகவரி:-*
*இல. 90, யாழ்.வீதி,*
*பெருமாள் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*
(80930)

## இராமப்பிள்ளை விஜயரெத்தினம்

(நயினாதீவு)

யா/நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமபபிள்ளை விஜயரெத்தினம் அவர்கள் நேற்று (26.11.2000) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் கமலாட்சியின் அன்புக் கணவரும், விஜயலெட்சுமி (லெபனான்),யோகலெட்சுமி, விஜயகௌரி, மலர்விழி (ஆசிரியை - நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்), அம்பிகைபாகன் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், திருஞானம், நடேசு (வர்த்தகர் - நெடுந்தீவு), சந்திரலிங்கம் (தபாலகம் - நெடுந்தீவு), ஓங்காரலிங்கம் (அதிபர்,யா/அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம்), யூடிற்றா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற R.R.பூபாலசிங்கம் (பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு, லண்டன்) ,பூமணி, R.R.அப்பாத்துரை (ஓய்வு பெற்ற ஆசிரியர்), R.R. கணேசன் ( பொறியியலாளர், நீர்ப்பாசனம்), பொன்னுத்துரை, தங்கம்மா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான முத்தையா, தருமலிங்கம், தங்கம்மா, மற்றும் நாகேஸ் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் சிவாஜினி கலாரூபன், பிரதீபா, மயூரன் (லண்டன்), செந்தூரன் (கொழும்பு), திலீபன், திவாகரன், ஜீவிதா, சுஜீபன், தாட்ஷாஜினி, கிரிஷாஜினி, சித்தார்த்தினி, கிரிஷாந், கிந்துஸன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.11.2000) திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் நயினாதீவு சல்லிவரவை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்:
வி.ஓங்காரலிங்கம் (மருமகன்)
(அதிபர்)

*7 ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*
(80931)

# உதயனின் பதினைந்தாவது அகவை நிறைவு நாள் 15

# மதத் தலைவர்களின் ஆசிகள்

## நல்லை ஆதீன முதல்வர்

எமது திருமண்ணில் இருந்து வெளிவரும் **உதயன்** பத்திரிகை 15ஆவது ஆண்டை நிறைவு செய்வதறிந்து பெருமிதம் அடைகின்றோம். எமது பாரம்பரியப் பண்பாட்டை தழுவி வெளிவரும் பத்திரிகை இன்றுபோல் என்றும் மலர அனைவரும் பிரார்த்தனை செய்யவேண்டும்.

உதயன் பத்திரிகை, பத்திரிகைகளுக்கு இருக்கவேண்டிய தர்மத்தை ஆரம்பித்த நாள் முதல் பேணி வருகிறது என்பதனை யாவரும் ஒப்புக்கொள்வர். உள்ளதை உள்ளவாறு சொல்லும் உதயனின் பண்பு உத்தமப் பண்பு எனலாம். கற்பனைகளை உண்மைகளுக்கு மாறாகப் புகுத்தாமல் ஒப்பற்ற சமூகத்தை ஒழுங்குபடுத்துவதற்கு பத்திரிகைகள் முனைய வேண்டும். உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளைப் பொறுத்தவரை நடுவு நிலையில் நின்று தமது பணியை மாசுபடாது ஆற்றிவருகின்றன.

உலகம் அமைதியின்மையால் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறது. உலகை ஆற்றுப்படுத்துவது அறிவுடையோர் கடமையாகும். அவ்வகையில் உதயன் பத்திரிகை ஆசிரியர் குழாத்தினர் நடுவு நிலைமையில் நின்று மெச்சத்தக்க பணியினை ஆற்றி வருகின்றனர். நடுவு நிலைமையில் நின்றார் பெருமையினை திருமூலர் சுவாமிகள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

*"நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை*
*நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை*
*நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்*
*நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே."*

ஈழத்தமிழர்கள் அனைவரும் உதயன் பத்திரிகை பொதுமக்களுக்கு ஆற்றிய பணியினை என்றும் மறக்கமாட்டார்கள். கடுமையான போர் அனர்த்தங்களுக்கு மத்தியில் தன் கடமையை நிறைவாகச் செய்துவருகிறது. ஆன்மீகம், அரசியல், சமூக ஒழுக்கம், மனிதாபிமானம், உலகநிலை அனைத்தையும் உள்ளடக்கி வெறும் செய்தித்தாளாக மட்டுமில்லாமல் சமூக வழிகாட்டியாகத் திகழும் உதயனின் வளர்ச்சியினை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் காலத்திற்கு காலம் வாழ்த்துவது மரபாகிவிட்டது. அஞ்சாது, அலட்சியமாக அயர்ந்திடாது அனுதினமும் அதிகாலையில் எம் கைகளில் தவழும் உதயன் பத்திரிகையின் மலர்வுக்காக உழைக்கும் ஒவ்வொருவருக்கும் சைவ மக்களின் சார்பில் வாழ்த்தும் நன்றியும் அடியேன் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் பணி சிறக்க பிரார்த்திக்கின்றேன். சென்ற காலத்து பழுதிலாத் திறத்தைப் பேணி இனி எதிர் காலத்து நவீனத்துவத்தையும் நல்லெழுச்சியையும் நாடி உதயன் - சஞ்சீவி மலரவேண்டும். மக்களின் மனங்களைக் கவர்ந்த உத்தம பத்திரிகையாகிய உதயன் எழிலுடன் என்றும் மலர எம் இனிய ஆசிகள் உரித்தாகுக.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய ஸ்வாமிகள்,**
இரண்டாவது குரு மகாசந்நிதானம்.

*திருஞானசம்பந்தர் ஆதீனம்,*
*நல்லூர்*

## வாசகர் உள்ளத்திலிருந்து....

### வீற்றிடும் உதயனே! வெற்றியுடன் வாழி!

| | | | |
|---|---|---|---|
| பற்றுவைத்து(த்) | தொடர்பு | ஊடகம் | மூலம் |
| பாங்குற(த்) | தன்னையே | நிலை நிறுத்தி(ச்) | -செய்தி |
| உற்ற வகை | உண்மை | ஓங்கியே | உலகிறுக்(கு) |
| உதவிட | உதயன் | செய்யும் பணி | - நன்கு |
| நிற்கவைத்து | பதினைந்(து) | ஆண்டுகள் | நிரம்பி |
| நிறைந்த | சேவையே | ஆனதனால் | - மக்கள் |
| பெற்று வைத்த | பேறுகள் | பற்பல | அதுபோல் |
| பெயர்த்தும் | உதயனே! | பல்லாண்டு | - வாழி! |
| எத்தனையோ | பொல்லா | இடர்களைத் | தாண்டி |
| எழுது | கோல் | ஏற்றத்தால் | - வந்த |
| அத்தனையும் | தாங்கி | அரிய | விருதுகள் |
| அடைந்து | பெருமிதம் | கொண்டிட்டு | - நித்தம் |
| சித்தர் எம் | யோகர் | திருநிறை | வளவில் |
| சிறந்த | பணியகம் | அமைத்தோர்ந்து | - வல்ல |
| வித்தகர்கள் | கொண்ட | ஆளணி | விளங்கிட |
| வீற்றிடும் | உதயனே! | வெற்றியுடன் | - வாழி! |
| அச்சுப்பொறி | தன்னில் | உத்திகள் | புகுத்தி |
| ஆய்ந்து | இலக்கியம் | அரசறிவியல் | - மற்றும் |
| மெச்சப்படுகிற | ஆக்கம் | வரைபுகள் | விளக்கம் |
| மேன்மை | பெற்றிட | மெருகூட்டி(க்) | - கோர்த்து |
| உச்சம் பெறும் | பயன் பெற | புதுக்கிப் | புகுத்தி |
| உவகை | வாசகர் | உள்ளத்தில் | - தந்த |
| கொச்சைப்படா | உதயனே! | என்றும் | புவிதனில் |
| கொலுவீற்(று) | இருந்து நீ | கோலோச்சி | - வாழி! |

*நயினைக் கவிஞர்*
*நா.க.சண்முகநாதபிள்ளை.*

### உரிமைக்காக உழைக்கட்டும்!

**தாளாத கீர்த்தியோடு திகழ்பவனே!**
**தமிழரின் விடிவுக்காக பிறந்தவனே**
**ஓயாத நேர்த்தியோடு மலர்பவனே - தமிழர்**
**உரிமைக்காகத் தினமும் உழைப்பவனே**
**தாயான தேசத்தின் தலைமக னே**
**தமிழன்னை நேசிக்கும் திருமக னே**
**வாயார நாமுன்னை வாழ்த்துகின்றோம்**
**வரலாற்றை நீயிங்கு எழுதவேண்டும்**

*-மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்-*

## யாழ்ப்பாண ஆயர்

யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் இக்கட்டான ஒரு காலகட்டத்தில் சிறப்பாகப் பணிபுரிந்து 15 ஆண்டுகளை நிறைவு செய்யும் **உதயன்** பத்திரிகைக்கு எமது வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சயடைகின்றோம்.

இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணச் சூழ்நிலையில் ஒரு பத்திரிகையை நடத்துவது என்பது இலகுவான ஒரு காரியமல்ல. பொருளாதார நெருக்கடிகள், பொருள் தட்டுப்பாடுகள், அரசியல் அச்சுறுத்தல்கள், செய்தித் தணிக்கை, நெருக்கீடுகள் ஆகிய பல்வேறுபட்ட குழப்பங்களுக்கு முகங்கொடுத்தே பத்திரிகைப் பணியை ஆற்றவேண்டியுள்ளது.

மக்கள் சேவையை தன் பணியாகக் கொண்டு நீதியோடும் நடுவு நிலைமையோடும் துணிவோடும் உண்மையை எடுத்துரைப்பதில் உதயன் பத்திரிகை அரும்பங்காற்றி வருகின்றது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. 1998ஆம் ஆண்டு துணிச்சலான பத்திரிகைக்குரிய தேசிய விருதினை பெற்றுக்கொண்டதே இதற்கு தகுந்த சான்றாகும்.

'உதயன்' பத்திரிகை அலுவலகத்தின் மீது 1999ஆம் ஆண்டு தாக்குதல் நடத்தப்பட்டு பின் இவ் ஆண்டு தடைவிதிக்கப்பட்ட பின்னரும் உதயன் பத்திரிகை தன் பணியில் தளராது உறுதியோடும் துணிவோடும் இருப்பது வரவேற்கத்தக்கதும் ஒளிமயமான எதிர்காலத்திற்கான ஓர் அறிகுறியுமாகும்.

தமிழ் மக்களுக்கான பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து துணிவோடும் நடுவுநிலைமையோடும் நீதியோடும் இன்னும் பலகாலம் சிறப்புப் பணிபுரிய வாழ்த்துகிறோம். இறை துணையை வேண்டுகிறோம்.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை,**
யாழ். ஆயர்.

*ஆயர் இல்லம்,*
*யாழ்ப்பாணம்.*

## தென்னிந்திய திருச்சபை ஆயர்

உதயனுக்கு பதினைந்து வயது பூர்த்தி ஆகிவிட்டது என அறிந்து பெரு மகிழ்ச்சி அடைந்தேன். உதயனின் இலட்சியங்கள் உயர்ந்தவை. அதன் துணிவு வியக்கத்தக்கது. இலங்கைத்தமிழர்களின் வரலாற்றைப் பதித்து வைப்பதில் அதன் பங்கு கணிசமானது.

சீரழிந்தும் சிறுமைப்பட்டதுமான நமது சமுதாயத்திற்கு அது ஓர் அகல் விளக்கு.

உதயன் தொடர்ந்து வெளிவர வாழ்த்துகின்றேன்.

**அதிவண. கலாநிதி எஸ்.ஜெபநேசன்.**
ஆயர், தென்னிந்திய திருச்சபை

## அன்னை துர்க்காதுரந்தரி

அகவை பதினைந்தில் காலடி எடுத்து வைக்கும் உதயன் பத்திரிகையை வாழ்த்துவதில் அகமகிழ்கின்றேன். உதித்த நாள் முதல் உள்ளம் கவரும் உன்னத பத்திரிகையாக உதயன் விளங்குகிறது. பல்லாயிரக்கணக்கான மக்களின் அபிமானத்திற்கு உரிய பத்திரிகையாக பரிணமித்து பிரகாசிக்கின்றது. இன்றைய உலகில் சமூகத்தை வழிநடத்துவதில் பத்திரிகைகளின் பங்கு மகத்தானதாகும். அவ்வகையில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக உதயன் - சஞ்சீவி பத்திரிகைகள் தமக்குரிய கடமையை மிகச் சிறப்பாக ஆற்றியுள்ளன.

நீதி நிலைப்பதற்கு, உலகை அறிவதற்கு, மனிதன் மனிதனை மதிப்பதற்கு, அறியாதன அறிவதற்கு உதவும் பெரும் சாதனமாகப் பத்திரிகைகள் விளங்குகின்றன. உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளைப் பொறுத்தவரை பத்திரிகைக்கு இருக்கவேண்டிய பக்குவத்தைப் பதினைந்து ஆண்டுகளாகப் பேணி வந்துள்ளது. அடக்கமான வார்த்தைகளால் ஆழமான கருத்துக்களை ஆசிரியத் தலையங்கம் சிந்திக்க தூண்டிய நாள்களை யான் நினைத்துப் பார்க்கின்றேன். நடுவுநிலையில் நின்று உள்ளதை உள்ளவாறு வெளியிட்டு அன்னவரையும் கவர்ந்த மக்கள் பத்திரிகையாக மகிமையோடு விளங்குகிறது.

ஊர் உறங்கும் வேளையில் தாம் உறங்காது உதயகாலத்தில் உதயன் ஒவ்வொருவர் கைகளிலும் கிடைக்க உழைப்பவர்கள் என்றும் நன்றிக்கும் வாழ்த்துக்கும் உரியவர்கள். எம் திருநாட்டில் அவலங்கள் மலிந்த வேளையிலும், அதர்மங்கள் தலைதூக்கிய வேளையிலும் தர்ம நிலையில் நின்று பொதுமக்களுக்காக குரல் கொடுக்கும் பொது ஊடகம் என்ற நிலையில் அளப்பெரும் பணிகளை உதயன் அன்றாடம் ஆற்றிவருகிறது.

ஆன்மீகப் பணிகளை, அறப் பணிகளை ஊக்குவிப்பதிலும், மனிதநேயம் மறுக்கப்படும் போது அஞ்சாது தட்டிக் கேட்பதிலும் தனக்கென தனியிடத்தைப் பெற்ற உதயன் தொடர்ந்தும் அப்பெருமையைப் பேணவேண்டும். நாடறிந்த நல்லெழுத்தாளர்களை ஊக்குவித்தமையும், புதிய படைப்பாளிகளை தோற்றுவித்தமையும் உதயன் - சஞ்சீவியின் வரலாற்றுப்பணிகளாகும்.

மூத்த அறிஞர்களை, பலர் பயனுற வாழ்ந்து நீத்தோரை, நல்லன செய்வோரை நானிலம் அறிய ஞாபகம் ஊட்டும் நற்பணி என்றும் நன்றிக்குரியதே. ஆதரவற்றோர்க்கு குரல் கொடுக்கவும், உதவும் கரங்களுக்கு உற்சாகமூட்டவும் உதயன் உறுதுணை செய்து வருவது உவப்பானதாகும்.

*'நயனோடு நன்றி புரிந்த பயனுடையார்*
*பண்பு பாராட்டும் உலகு.'*

என்ற குறளுக்கு அமைய நீதியையும் அறத்தையும் தமக்கும் பிறர்க்கும் பயன்படும் வண்ணம் எம்மண்ணில் காக்கும் உதயன் - சஞ்சீவி நிறுவனத்திற்கு எனது நல்வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். சூரியன் தினமும் உதிப்பது போல் உதயன் என்றும் உதிக்க துர்க்கை அம்பாளை பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

**துர்க்கா துரந்தரி**
**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி,**
தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்.

*தெல்லிப்பழை*

## மாவை ஆதீனகர்த்தா

ஒரு நாடு கல்வி ஞானம், மொழிவளர்ச்சி, ஆராய்ச்சியின் பால் எழும் அறிவு, நாகரிகம் இவைகளில் முன்னணி பெற வேண்டுமாயின் அதற்கேற்ற தரவுகளை மனிதன் இயல்பாகவே அறியவேண்டும். அல்லாமலும், தனது பொது அறிவையும், நாட்டு நிகழ்வுகளையும் எதுவித சங்கடங்கள் ஏதுமின்றி அறிய அவன் முனையும் போது, பத்திரிகைகள் தான் கைகொடுத்து உதவுகின்றன.

பத்திரிகைகளும் பத்திரிகா தர்மத்தை முழுவீச்சில் மேற்கொள்ளவேண்டிய பொறுப்புக்களையும் கொண்டிருக்கிறது. இத்தகைய பொறுப்புக்களோடு மனித சமூகத்தை நல்வழியிலிட்டுச் செல்ல **உதயன்** கடந்த 15 வருடங்களாக உழைத்து வருவது கண்கூடு. யாவராலும் வரவேற்கக்கூடிய தரவுகளோடு இப்பத்திரிகை பத்திரிகா தர்மத்தோடு இணைந்து 15 வருடங்கள் வளர்ந்திருக்கின்றது.

உதயன் நீடூழி நின்று நிறைந்த கைங்கரியங்களை ஆற்ற வேண்டுமெனப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

**மஹாராஜஸ்ரீ க.து.ஷண்முகநாதக்குருக்கள்,**
மாவை ஆதீனகர்த்தா.

## அங்கிலிக்கன் பிரதேச முதல்வர்

எமது தேசத்தின் நெருக்கடிமிகு காலகட்டத்தில் தனது 15ஆவது அகவையை பூர்த்தி செய்யும் **உதயன்** நாளிதழை மனமார வாழ்த்துகிறோம்.

எமது சமூகத்தின் எல்லாக் கோணங்களையும் பிரதிநிதித்துவம் செய்து நாளாந்தம் செய்தி வெளியிடும் நாளிதழ் உதயன் என்பதை நாமறிவோம். வெறுமனே செய்தியை மட்டும் எழுதாது 'மக்களை சமகால நிகழ்வுகளை குறித்து சிந்திக்க வைக்கவும் செய்யும்' உதயன் நாளிதழ் பல்லாண்டு காலம் வாழ்க.

செய்திகளின் உண்மைத்தன்மை, எதிர்கால நம்பிக்கையின் செய்தி, நீதி நியாயத்துக்கான போராட்டம், துணிகரமாக உண்மையை எடுத்துச் சொல்லும் பண்பு ஆகியவை இன்றைய எமது பத்திரிகை தர்மத்துக்கு தேவை. இவை தொடர எம் வாழ்த்துக்கள்.

**செ.ரி.நேசகுமார்,**
பிரதேச முதல்வர்

*அங்கிலிக்கன் திருச்சபை*
*யாழ்ப்பாணம்.*

## சாரதா சேவாச்சிரமம்

**உதயன்** பத்திரிகை மற்றும் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்து விட்டது. இந்த வருடத்தில் பல சோதனைகளுக்கு ஆளாக்கப்பட்டது. இருப்பினும் எல்லாம்வல்ல பரம்பொருள் துணையால் மீண்டும் புத்துயிர் பெற்று பணிபுரிகிறது.

பத்திரிகை உலகில் அண்மையில் காலம் சென்ற ஒரு நிருபரின் குடும்பத்திற்கு நிதி சேர்ப்பதால் இப்பத்திரிகை எமது நெஞ்சில் நீங்கா இடத்தைப் பெற்றுவிட்டது.

தூய அன்னை ஸ்ரீசாரதாதேவியின் திருவடியில் யான் நமஸ்கரித்து உதயன் ஆசிரியர், உதயன் பணிமனையில் உள்ள சகலரையும் அன்னை ஆசீர்வதிக்க துதிக்கிறேன். இதுவே அடியேனது மனமார்ந்த பிரார்த்தனையாகும்.

**சுவாமி சித்ருபானந்தா,**
ஸ்ரீ ராமகிருஷ்ண
சாரதா சேவாச்சிரமம்.

## மெதடிஸ்த முகாமைக் குரு

நவீன காலத்தின் தொடர்புச் சாதனங்களின் பல்வேறு வளர்ச்சிகளில் பத்திரிகைத்துறை அன்றும் இன்றும் முன்னணி வகிக்கின்றது. ஏனெனில் இத்தொடர்புச் சாதனமே ஏழைக்கும் செல்வந்தனுக்கும் பாகுபாடற்ற புனித சேவையைப் புரிந்து வருகின்றது.

இவ்வகையில் **உதயன்** ஜனரஞ்சகமானதாகவும் யதார்த்தமானதாகவும் தன் பணியை நடுவு நிலையாகச் செய்துவருகின்றது. யாழ்ப்பாண மக்கள் 'திறந்தவெளிச் சிறையில்' வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் அவர்களுக்கு வெளியுலகச் செய்திகளையும் உள்ளூர்ச் செய்திகளையும் ஒவ்வொரு இல்லங்களுக்கும் எடுத்துச்செல்லும் துணிச்சலுள்ள பத்திரிகையாக இருப்பது உதயனின் தனிச் சிறப்பாகும்.

உண்மையான பத்திரிகையாக அது வெளிவந்து கொண்டிருப்பதால் பல சோதனைகளையும் சவால்களையும் எதிர்கொள்ள நேர்ந்தது. அவற்றின் மத்தியிலும் சமூகப் பொறுப்புணர்வுமிக்க தனது பணியை அது தொடர்வது மக்களுக்கு மகிழ்ச்சி தருவதாகும்.

பதினைந்து ஆண்டுகளைக் கடந்து நிமிர்ந்து நிறைவுடன் திகழும் உதயனின் சிறப்புப் பணி மங்களகரமாக அமைய இறையாசிகள் வேண்டிவாழ்த்துகிறேன்.

**வண.க.கருணைசேகர,**
முகாமைக் குரு மெதடிஸ்த திருஅவை.

*யாழ்ப்பாணம்.*

## அருட்கவி சீ.விநாசித்தம்பி

சொற்புகழ் மிளிரும் தெய்வ சுகமிகு யாழ்ப்பாணத்தில்
நற்கதிர் பலபரப்பும் ஞாயிறாய், **உதயன** பேரோ(டு)
உற்பவித் துலகம்பார்க்கும் உயர்ந்தகண் ணாடியாகிப்
பொற்புயர் பதினையாண்டு பூர்த்திகொண்டெழுந்தாய்வாழி

அளவிலாச் சமயஞானம் ஆய்ந்திடு புதுவிஞ்ஞானம்
இளையவர் முதியோர்க்கேற்ற இலட்சியக் கதைகள், என்றும்
உளமுணர் கலைகள் நல்கும் **உதயனே**, செய்தி எல்லாம்
குளிரவே தேடித் தேடிக் கொடுக்கின்றாய் தமிழ்போல் வாழி

உதயனே வாழ்க, நின்றன் உடன்பிறப் பாம் சஞ்சீவி
முதலிய வெளியீடெல்லாம் முதுகலை மலையைப் போலப்
புதுநெறி புகட்டி வாழ்க, புதின ஊடகங்கள் போற்றும்
**அதிசிரஞ்சீவியாக** ஆயுள்பல் லாண்டு வாழ்க

## மத்திய புலனாய்வு அமைப்புகளுக்கு
# வீரப்பன்-புலிகள் தொடர்பு பற்றி
# விசாரிக்க இந்திய அரசு பணிப்பு!

பெங்களூர், நவ. 27

சந்தனமரக்கடத்தல்காரன் வீரப்பனுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பிருப்பதாகக் கூறப்படுவதுபற்றிவிசாரணைகளை மேற்கொள்ளுமாறு இந்திய அரசின் புலனாய்வு அமைப்புகளான றோ, சி.பி.ஐ எனப்படும் மத்திய புலனாய்வுத் துறை மற்றும் ஐ. பி. எனப்படும் இந்திய புலனாய்வுத் துறை ஆகியவற்றுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை. கோபால்சாமி மேற்கொண்ட செய்திப்பரிமாற்றத்தின் மூலம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வீரப்பனிடம் கேட்டுக் கொண்டதையடுத்தே பணயக் கைதியாக வைத்திருந்த நடிகர் ராஜ்குமாரை வீரப்பன் விடுதலை செய்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்தே உள்துறை அமைச்சு மேற்படி செய்திகள் குறித்து விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளது.

நடிகர் ராஜ்குமாரை மீட்டு வந்த தூதுக்குழுவில் இடம் பெற்றிருந்த தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், பேராசிரியர் கல்யாணி மற்றும் இந்த விடயத்தில் முக்கிய பங்கு வகித்த டாக்டர் பானு, குளத்தூர் மணி ஆகியோர் குறித்தும், அவர்கள் சம்பந்தப்பட்ட அமைப்புகள் பற்றியும் விவரங்களைத் திரட்டித் தருமாறு உள்துறை அமைச்சகம் பணித்துள்ளது.

ராஜ்குமார் கடத்தல் மற்றும் விடுவிக்கப்பட்டதில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டுள்ளார்களா என்பதை அறிவதில் உள்துறை அமைச்சு தீவிர கவனம் எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

[ஒ-7]

## ராஜ்குமார் விடுதலையில் புலிகளுக்குச் சம்பந்தமில்லை

### பழ. நெடுமாறன் வலியுறுத்து

சென்னை, நவ. 27

வீரப்பனிடமிருந்து கன்னட நடிகர் ராஜ்குமார் விடுவிக்கப்பட்டதற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

ராஜ்குமாரை விடுவிக்க வீரப்பனிடம் தூதுவராகச் சென்ற பழ. நெடுமாறன் மைசூர் சிறைக்குச் சென்று அங்குள்ள 51 தடா கைதிகளைப் பார்வையிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் 'தடா' கைதிகளை விடுதலை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், ராஜ்குமாரின் விடுதலைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் தெரிவித்த பழ.நெடுமாறன் இதுபோன்ற பிரச்சினைகளில் விடுதலைப் புலிகள் தலையிடுவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

**உலக அரங்கில்**

## உலகசமாதானத்தை வலியுறுத்தி யுத்தக் கப்பல்கள் ஒன்றுகூடல்

மும்பை, நவ. 27

உலக சமாதானத்தை வெளிப்படுத்தும் நோக்கில் 24 நாடுகளின் யுத்தக் கப்பல்கள் இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலம் மும்பை துறைமுகத்தில் ஒன்று கூடவிருக்கின்றன.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இஸ்ரேல் மற்றும் இலங்கை உட்பட 24 நாடுகளின் யுத்தக் கப்பல்கள் மும்பையில் ஒன்று சேர்ந்து சமாதானத்தை வெளிக்காட்டுமென இந்தியக் கடற்படை அதிகாரி கொமடோர் அரவிந்த் பாலி தெரிவித்தார்.

வரலாற்றில் உலக யுத்தக் கப்பல்கள் ஒன்று சேர்வது இதுவே முதல் தடவையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

மும்பைத் துறைமுகத்துக்கு வருகை தரும் யுத்தக் கப்பல்களை இந்திய கடற்படையினர் விமரிசையாக வரவேற்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஒ-7)

## 'தடா' வழக்குகளை விசாரிக்க
# சிறப்பு நீதிமன்றம் அமைப்பதற்கு கர்நாடக அரசுக்கு அனுமதி

பெங்களூர். நவ. 26

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் கர்நாடகச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள 51 தமிழர்கள் மீதான 'தடா' வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் அமைக்க இந்திய உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த நீதிமன்றம் மைசூரில் இயங்கும் என்றும் மைசூர் கூடுதல் மாவட்ட நீதிபதி கிருஷ்ணப்பா சிறப்பு நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பணியாற்றுவார் என்றும் கர்நாடக அரசு தெரிவித்துள்ளது.

வீரப்பனின் நிபந்தனைப்படி கர்நாடகச் சிறையில் உள்ள 51 தமிழர்கள் மீதான வழக்குகளை விலக்கிக் கொண்டு, அவர்களை விடுதலை செய்ய கர்நாடக அரசு எடுத்த முயற்சிக்கு உச்ச நீதிமன்றம் முன்னர் தடை விதித்தது.

இதனையடுத்து அவர்கள் மீதான வழக்குகளை நீதிமன்றம் அமைத்து விரைவாக விசாரிக்க அனுமதி அளிக்கும்படி கர்நாடக அரசு சமர்ப்பித்த கோரிக்கை மனுவினை அடுத்தே உச்ச நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

## பிரபாகரன் பிறந்தநாள் சுவரொட்டி

சென்னை, நவ. 27

தமிழகத் தலைநகர் சென்னையில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு பிறந்தநாள் வாழ்த்துத்தெரிவித்து வர்ணச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தமிழ் இளைஞர் பேரவை என்ற பெயரில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில், "நவம்பர் 26 பிரபாகரன் பிறந்தநாள். வீரம் அனைத்தையும் தனது ஊற்றாக்கிய உலக மாவீரன் வாழியவே" என்றுள்ளது. (ஒ)

## காஷ்மீர் தீவிரவாதிகள் மீதான
# தாக்குதல் நிறுத்த அறிவிப்பை குரியத் மாநாடு கட்சி வரவேற்பு

ஸ்ரீநகர், நவ. 27

இந்த மாத இறுதியில் ஆரம்பிக்கும் றம்ழான் நோன்பு காலத்தில்காஷ்மீர்த் தீவிரவாதிகள் மீதான ராணுவ நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கும் மத்திய அரசின் முடிவை 23 பிரிவினைவாத இயக்கங்களின் கூட்டமைப்பான குரியத் மாநாடு கட்சி வரவேற்றுள்ளது.

கடந்த வெள்ளி மத்திய அரசின் முடிவு குறித்துகுரியத்தின்நிர்வாகக் குழு கூடிப்பரிசீலித்த பின்னர் வெளியிட்ட அறிக்கையில் தற்காலிக தாக்குதல் நிறுத்தத்தை வரவேற்பதுடன், காஷ்மீரில் அமைதியைக் கொண்டுவர அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைக்கும் குரியத் மாநாடு கட்சி தயாராக உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

காஷ்மீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஓர் அரசியல் வழிமுறையை உருவாக்க வேண்டியது அவசியம் என்று அறிக்கையில் வலியுறுத்தியுள்ள அந்தக் கூட்டமைப்பு தாக்குதல் நிறுத்த நடவடிக்கை மத்திய அரசின் கொள்கையில் ஏற்பட்டுள்ள ஆக்கபூர்வ மாறுதலைக் காட்டுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை மத்திய அரசின் தாக்குதல் நிறுத்த அறிவிப்பை அமெரிக்காவும், பிரிட்டனும் வரவேற்றுள்ளன.

(ஒ-8)

## சீன-இந்திய வரைபடப் பரிமாற்றம்

பெய்ஜிங், நவ. 27

இந்தியாவுடனான எல்லையில் 545 கிலோ மீற்றர் தூர எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியின் விரிவான வரைபடங்களை சீனா நேற்றுப் பரிமாறிக்கொண்டது.

பிரச்சினைக்குரிய பகுதிகளை இரு நாடுகளும் ஏற்றுக்கொண்டு வரைபடங்களைப் பரிமாறிக் கொள்வது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிபர் தேர்தல் குறித்து அமெரிக்கர்கள் சலிப்பு

வாஷிங்ரன், நவ. 27

அமெரிக்காவின் 43 ஆவது ஜனாதிபதித் தேர்தல் முடிவு தொடர்ந்து இழுபறி நிலையில் இருப்பதால் அமெரிக்க மக்கள் சலிப்படைந்துள்ளதாக கருத்துக் கணிப்புகளில் தெரிய வந்துள்ளன.

கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தலில் என்றுமில்லாதவாறு வாக்குப்பதிவு முதல் வாக்கு எண்ணிக்கை வரை பல குளறுபடிகள் இடம் பெற்றன.

அத்துடன் தேர்தல் முடிவைத் தீர்மானிப்பதற்கு நீதிமன்றங்களில் பிரதான வேட்பாளர்கள் சட்டப் போராட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இது குறித்து அமெரிக்கர்களிடையே நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகளில் ஆரம்பத்தில் முடிவைத் தெரிந்து கொள்வதில் இருந்த ஆர்வம் தற்போது அற்றுப்போய் சலிப்பு வந்துள்ளதாக பெரும்பாலான அமெரிக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் புளோரிடா மாகாணத்தில் கைகளால் வாக்குகளை மீண்டும் எண்ணி முடிப்பதற்கு இன்றுடன் முடிவடையும் காலக்கெடுவை மேலும் நீடிக்க புளோரிடா உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டதால் ஜனநாயகக்கட்சியினர் கவலையடைந்துள்ளனர்.

குடியரசுக்கட்சி வேட்பாளர் புஷ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டால் அதனை ஒப்புக் கொள்ளப்போவதில்லை என்று தெரிவித்துள்ள ஜனநாயகக்கட்சி வேட்பாளர் அல்கோர் அந்த அறிவிப்புக்கு எதிராகச் சட்டநடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதாகவும் கூறியுள்ளார்.

(ஒ-7)

## தாக்குதல் நிறுத்தத்தைக் கண்டித்து
# வாஜ்பாயின் கொடும்பாவியை சிவசேனையினர் எரித்தனர்

புதுடில்லி, நவ. 27

இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் கொடும்பாவியை டில்லி சிவசேனையினர் எரித்தனர்.

காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கு எதிராக இந்திய இராணுவம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை றம்ழான் நோன்பு நாள்களில் தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கும் மத்திய அரசின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே டில்லி சிவசேனைக் கட்சியினர் பிரதமர் வாஜ்பாயின் கொடும்பாவியைக் கொளுத்தியுள்ளனர்.

டில்லி சிவசேனைத் தலைவர் ஜெய்பகவான் தலைமையில் நாடாளுமன்ற வளாகம் அருகே திரண்ட அவ்வமைப்பினர்—

தீவிரவாதிகளுக் கெதிரான தாக்குதல் நிறுதத அறிவிப்பை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்றும்,

தீவிரவாதிகளுக் கெதிராக கடும் போக்கைக் கடைப்பிடிக்கும் படியும்,

பிரதமர் வாஜ்பாய் இந்திய நலனை சீர்குலைத்துள்ளதாகவும்— கோஷங்கள் எழுப்பினர்.

(ஒ-8)

## 54 பேருக்கு கலைமாமணி விருது

சென்னை, நவ. 27

நடிகர் அஜித்குமார், நடிகை தேவயானி, எழுத்தாளர் சுஜாதா உட்பட 54 பேருக்கு தமிழக அரசு 'கலைமாமணி' விருது வழங்கிக் கௌரவித்துள்ளது

விருதுக்குரியவர்களுக்கு நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற விழாவில் ஆளுநர் பாத்திமா பீவி, விருதுகளை வழங்க, முதல்வர் கருணாநிதி பதக்கங்களை அணிவித்தார்.

## மேசையில் தலை மோதியதால் யுவதி மீண்டும் பார்வைபெற்றார்

### நியூசிலாந்தில் அதிசயச் சம்பவம்

வெலிங்டன், நவ. 27

10 வருடங்களுக்கு முன்னர் பார்வையிழந்த ஒரு பெண்ணுக்கு மேசையில் மோதியதால் பார்வை மீண்டும் கிடைத்துள்ளது.

வியப்புக்குரிய இந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நியூசிலாந்தைச் சேர்ந்த வீசாரைட் என்ற 24 வயதான யுவதிக்கு 10 வருடங்களின் முன்னர் மூளையில் ஏற்பட்ட கட்டி காரணமாக இரு கண்களிலும் பார்வை பறிபோனது.

அதிலிருந்து பார்வை இழந்த அவர் தனது செல்லப் பிராணியான நாயின் துணையுடன் வாழ்ந்து வந்தார்.

பழக்கப்பட்ட அந்த நாய் வீசாவை அவர் விரும்பிய இடங்களுக்கு அழைத்துச் செல்வது உட்பட பல உதவிகளைச் செய்து வந்தது.

சமீபத்தில் ஒருநாள் வீசா மேசை ஒன்றின் அருகே அமர்ந்து கோப்பி அருந்திக் கொண்டிருக்கையில் அவரது நாய் அருகில் வந்து வீசாவின் காலை நக்கியது.

அதனால் மகிழ்ந்த வீசா நாயை முத்தமிடுவதற்காக வேகமாகக் குனிந்தபோது மேசையில் தலையை மோதிக் கொண்டார்.

இந்தச் சம்பவத்தையடுத்து அவரது இடது கண் பார்வையைப் பெற்றுள்ளது.

இது குறித்து மருத்துவர்கள் விளக்கம் எதுவும் அளிக்கவில்லை. ஆனால் வீசா பார்வை பெற்றுள்ளதை அவர்கள் உறுதி செய்தனர்.

(ஒ-8)

# இடைக்காலப் படியை நிபந்தனை இன்றி வழங்கப் பின்னடிப்பது ஏன்?

## கூட்டுறவு ஆணைக்குழுவிடம் சங்கத் தலைவர் கேள்வி

அரியாலை, நவ. 27

புதிய சம்பளத் திட்டத்தை அமுல் செய்வதில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைத்துவம் அக்கறை எடுக்கவில்லையெனக் கூறும் தாங்கள் இடைக்காலப் படியை நிபந்தனைகளின்றி வழங்க வேண்டும் என அதே தலைமைத்துவம் கோரும்போது ஏன் மறுக்கிறீர்கள்?

வடக்கு—கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் செயலாளருக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி வி. கே. சிவஞானம் அனுப்பி வைத்துள்ள 'பக்ஸ்' செய்தியில் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்தச் செய்தியில் அவர் சுட்டிக்காட்டியுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைச் சமாளிக்கவென நிபந்தனையெதுவுமின்றி அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட இந்த இடைக்காலப் படிக் கொடுப்பனவுக்குக் கூட்டுறவுத் துறைக்கு மட்டும் நிபந்தனை விதிப்பதை எவ்வாறு நியாயப்படுத்த முடியும் என்ற எமது மூலப்பிரச்சினை (Core Issue) பதிலளிக்கப்படவில்லை.

புதிய சம்பளத் திட்ட அமுலாக்கத்திற்கும் அச் சுற்றறிக்கையில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் தான் தடையாக உள்ளனவே தவிர தலைமைத்துவம் அல்ல.

ஒரு புறத்தில் சம்பளத் திட்டம், இடைக்காலப் படி என்பனவற்றை வழங்கவென அங்கிகரித்து விட்டு மறுபுறத்தில் நிபந்தனைகளை விதிப்பது சுயமுரண்பாடாக (Paradoxical) அமையும்.

★ பணியாளர்களின் அன்றாடப் பிரச்சினைகளை அன்றாடம் நேரில் காண்பவர்களும், அவர்களது கோரிக்கைக்கு நேரடியாக முகம் கொடுப்பவர்களும், அவர்களை ஒரு திருப்தி கொண்ட (Contended) பணியாளர் குழாமாக்கிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியவர்களும், அவர்களது நலன்களில் நேரடியாக அக்கறை கொள்ள வேண்டியவர்களும் கூட்டுறவுச் சங்கத் தலைமைத்துவமே.

★ 60 வீதமான பதவிவின்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்றால் 40 வீதமானவை கிடைக்கப் பெறவில்லை என்றும், அவர்களுக்கு இந்தப் படி வழங்கப்பட முடியாது என்பதும் தானே அர்த்தம். இது எவ்வாறு நியாயப்படுத்தப்படலாம்? அப்பட்டமான பாகுபாடாக அமையாதா?

[ஐ-17]

## வடக்கு-கிழக்குக்கு தனியான பண்பாட்டுஅலுவல்திணைக்களம்

திருகோணமலை, நவ. 27

வடக்கு — கிழக்கு மாகாணத்துக்கென பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இந்தத் திணைக்களம் தனது செயற்பாடுகளை ஆரம்பிக்கும் என வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் திருகோணமலையில் நடைபெற்ற தமிழிலக்கிய விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு — கிழக்கு மாகாணத்தின் பண்பாட்டு விழுமியங்களையும், புராதனச் சின்னங்களையும் அழியவிடாது பாதுகாக்கும் நோக்கில் இந்தத் திணைக்களம் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தும். ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் பணியாற்றும் கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் புதிதாக ஆள் சேர்ப்புச் செய்யப்படவுள்ள கலாசார உத்தியோகத்தர்கள் மூலம் இந்தப் பணி முன்னெடுக்கப்படும் என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கு புதிய வள ஆளணியினர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[ஐ-7]

## பேராதனையில் கற்கைகள் நிறுத்தம்

பேராதனை, நவ.27

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் சகல பீடங்களினதும் கற்கை நெறிகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

மாணவர்கள் அனைவரும் விடுதிகளை விட்டு வெளியேறிவிட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கற்கை நெறிகள் ஆரம்பமாவதற்கான புதிய திகதி அறிவிக்கப்படும்வரை பல்கலைக்கழக வளாகத்தினுள் மாணவர்கள் எவரும் உட்பிரவேசிக்கக் கூடாது எனவும் துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

(ஐ-7)

## தாச்சிப் போட்டி

வலி. வடக்கு, நவ. 27

வட மாகாண தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக் கழகத்தினர் நடத்தி வரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் இணுவில் அண்ணா வி. கழகத்தை எதிர்த்து நவாலி தென்றல் வி. கழகம் மோதவுள்ளது. (ஐ-86)

## முத்தமிழ் விழா

கொழும்பு, நவ. 27

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள முத்தமிழ் விழா அடுத்தமாதம் 2 ஆம், 3 ஆம் திகதிகளில் கொழும்பு இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கின் அபிவிருத்தி புனர் வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு — கிழக்கின் தமிழ் விவகாரங்கள், இந்து சமய கலாசார அமைச்சின் மேலதிக செயலாளர் ந. பரம்சோதி தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக அமைச்சின் செயலாளர் வி. இரகுநாதன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக இணைப்புச் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம் கலந்து கொள்வார்.

இசை, நடனம், நாடகம் மற்றும் கூத்து வடிவங்கள் இந்த விழாவில் சிறப்பு நிகழ்வுகளாக நடைபெறவுள்ளன. (ஐ-7)

## சிறுவருக்கு தலையணைகள் அன்பளிப்பு

வலி. கிழக்கு, நவ. 27

சிறுவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்கம் நடத்தும் சிறுவர் நிறைவாழ்வு இல்லத்திற்கு 150 புதிய தலையணைகளை நல்லூர் பிரதேச சபை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்தச் சிறுவர் நிறை வாழ்வு இல்லத்தில் உள்ள சிறுவர்கள் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டே இருபது ஆயிரம் ரூபா பெறுமதியான தலையணைகளை சபை அன்பளிப்பாக வழங்கி உள்ளது.

(ஐ-180)


## விசேட கலந்துரையாடல்

எதிர்வரும் 29 - 11 - 2000 அன்று யாழ். உயர் தொழில் நுட்ப மாணவ ஒன்றியத்தின் சஞ்சிகை வெளிவரவுள்ளது. எனவே அது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 28 - 11 - 2000 (செவ்வாய்க்கிழமை) நிறுவன கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு அனைத்து மாணவர்களையும், கடந்த வருடம் 1999 ஆம் ஆண்டு இறுதி வருட மாணவர்களையும் தவறாது சமூகம் கொடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மாணவர் ஒன்றியம்
A. T. I

(80923)

## யந்திர பூசை

பருத்தித்துறை – பன்னையம்பதி
இராஜேஸ்வரி ஆலய கும்பாபிஷேகம்

08–12–2000 வெள்ளிக்கிழமை நடைபெறும். அம்பாளின் யந்திரபூசை 27–11–2000 இன்று தொடக்கம் தொடர்ந்து 9 தினங்கள் இணுவில் சிவன் கோயிலில் காலை 10 மணிக்கு நடைபெறும்.

பிரதம குரு:
தாணு – வாசுதேவசிவாச்சாரியர்

இ. வரதராஜாக் குருக்கள்
(80897) பரிபாலகரும், பிரதம குருவும்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். உயர் தொழிநுட்ப நிறுவனத்தின் H. N. D. A.
2 ஆம் வருட (பகல்) மாணவன்
ச. மயூரனின் அன்புத் தாயார்

### திருமதி ச. வள்ளிநாயகி

அவர்களின் மறைவால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

3ஆம் வருட மாணவர்கள் (பகல்),
(80919) உயர் தொழிநுட்ப நிறுவனம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
திரு. பே. கணேஸ்குமார் அவர்களின்
அன்புச் சகோதரன்

### பேரம்பலம் சிவகுமாரன்

(மான்ஸ்)

24-11-2000 அன்று பிரான்ஸில் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இறுதி வருட வர்த்தகப்பிரிவு மாணவர்கள்
முகாமைத்துவ வணிகபீடம்,
(80920) யாழ். பல்கலைக் கழகம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செபஸ்ரியாம்பிள்ளை லில்லி மாகிறேற் (றுக்மணி)

செபஸ்ரியாம்பிள்ளை லில்லி மாகிறேற் (றுக்மணி) நேற்று (26-11-2000) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற அரியகுட்டி, -செல்லம்மா ஆகியோரின் அருமை மகளும், சுரோலிஸ் மரியம்மாவின் பாசமிகு மருமகளும் செபஸ்ரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், கலிஸ்ரா (கனடா), கலீனா (ஜேர்மனி), காலஞ்சென்ற அனஸ்லீன், நியூட்டன் (இத்தாலி), வச்சலா (பிரான்ஸ்), சுரேஷ் (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற சந்திரதாஸ், தர்மலிங்கம் (இத்தாலி), சித்தார்த்துரை (ஜேர்மனி), ஜஸ்ரின் (பிரான்ஸ்), இந்திரா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், றொனி சுதாகர் (கனடா), தர்ஷிக்கா (கனடா), றொனல்டோ (பிரான்ஸ்), லில்லி (பிரான்ஸ்), நபீமியா (ஜேர்மனி), சப்றினா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், திரேசம்மா, ஜெஸ்பின் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காகப் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு இன்று (27-11-2000) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:
க. செபஸ்ரியாம்பிள்ளை
(கணவன்)

இல 46, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம். (80918)

### திருமதி ஞானரத்தினம்மாள் சின்னத்தம்பி

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

கெருடாவிலைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானரத்தினம்மாள் சின்னத்தம்பி அவர்கள் 25-11-2000 ஆம் திகதி சனிக்கிழமை இறைபதம் எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற களஞ்சியப் பொறுப்பாளர் ஐயாத்துரை சின்னத்தம்பியின் பிரிய துணைவியாரும், ஞானகுமார் (கணக்காளர், கொழும்பு), ஞானேஸ்வரி (ஆசிரியை, யாழ்/புனித சென். றோக்ஸ் றோ. க. த. க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், T. V தொழில் நுட்பவியலாளர் சிவகுமாரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-11-2000) திங்கட்கிழமை பி. ப. 1. 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சிவகுமாரன்
(மருமகன்)

117/2, அரசடி வீதி,
கந்தர்மடம். (80922)

# E.C.E. PART I & II (LOND.)

(யாழ். நகரில் மீண்டும்)

C. E. I வகுப்புக்கள் Feb.- 2001இல் ஆரம்பமாகின்றன. A/L நா[illegible]த பாடங்கள் (2 திறமை), O/L ஆங்கிலம் 10 மாணவர்களுக்கு இடம்.

தொடர்பு:— பதிவாளர்,
63 (40), கல்லூரி வீதி,
நீராவியடி.

(80879)


# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் B. Com. Part- I மாணவன்
ச. மயூரனின் அன்புத் தாயார்

## திருமதி ச. வள்ளிநாயகி

அவர்கள் 25—11—2000 அன்று சிவபதம் அடைந்து விட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

பட்டப்படிப்புக் கல்லூரி,
B Com Part I
மாணவர்கள்.

(சி/13988)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி

## ஜெயமலர் தர்மபாலன்

(தங்கம்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30-06-1958 | 28-1[illegible]-2000 |

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசப் பிணைப்புடனே நீ இருந்தாய் ........
துன்பம் பல வந்த போதும் துணிவுடனே
எதிர்த்து நின்றாய்;
உயர்வான சிந்தையுடன் வாழ்ந்தவளே!
உன்னை நாம் இனி எங்கே காண்போம்?

எங்கள் குடும்ப விளக்கு அணைந்த போது உடன் வந்து ஆறுதல் கூறியோர்க்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து எமது துயரில் பங்கு கொண்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தபால். தந்தி. தொலைபேசி மூலம் எம்முடன் துயர் பகிர்ந்தோருக்கும் அன்னார் சுகவீனமுற்று நீர்கொழும்பு, கொழும்பு ஆகிய இடங்களில் இருந்த போது உதவியோர்க்கும் யாழ். போதனா வைத்தியசாலை விடுதி இல. 23 இல் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை இன் முகத்துடன் சிகிச்சையளித்த வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும், வைத்தியசாலையில் பராமரிப்பில் உதவிய உறவினர்களுக்கும், எமது இல்லத்தில் வந்து வைத்திய உதவி வழங்கியவர்களுக்கும், அன்னாரின் நல்லடக்க தினமாகிய 29—10—2000 அன்று தமது வர்த்தக நிலையங்களைப் பூட்டி எமது துயரில் பங்கு கொண்ட அயல் வர்த்தக பிரமுகர்களுக்கும் அன்னாரின் நல்லடக்க ஆராதனையை எமதில்லத்தில் வந்து நடத்தி வைத்த கோண்டாவில் நல்ல சமாரியன் தேவலய உறுப்பினர்களுக்கும் கோப்பாய் கிறிஸ்தவ சேமக்காலையில் உதவிய சேமக்காலை நிர்வாகத்தினர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் நினைவாக இன்று (27—11—2000) திங்கட்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் பதிய போசன வைபவத்தில் பங்குபற்றிச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், தாயார், சகோதரர்கள்,
மைத்துனர், மைத்துனிமார்
மற்றும் பெறாமக்கள்.

மங்கை வர்த்தக நிலைய இல்லம்,
கற்பகப் பிள்ளையார் கோயிலடி,
பலாலி வீதி, உரும்பிராய்.

(80788)

# நூலகங்களுக்கு நூல்கள்

வலி. கிழக்கு. நவ. 27

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட மூன்று நூலகங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி மூலம் நூல்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

கொக்குவில், கோண்டாவில் நல்லூர் ஆகிய உப நூலகங்களுக்கு இந்த நூல்கள் வழங்கப்பட்டுள்ளன. (இ-180)

# கணனிச் செயற்பாட்டறை

நெடுந்தீவு, நவ. 27

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் புதிதாகக் கணனிச் செயற்பாட்டறைக்கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

14 லட்சம் ரூபா செலவில் இந்தப் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படுவதாக வித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் தெரிவித்தார்.

(ஐ-111)

# டிறிபேக் கல்லூரி மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், நவ. 27

ஜி.சி.ஈ (சாதாரணதர) பரீட்சைக்கு விண்ணப்பித்த சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், மறுநாள் 30 ஆம் திகதி வியாழக்கிழமை கல்லூரி தற்காலிகமாக இயங்கும் கோண்டாவில் நிரு கல்வி நிலையத்திலும் தேசிய அல்லது தபால் அடையாள அட்டையுடன் நேரில் வந்து பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும்படி அதிபர் எம். நாகேந்திரராஜா அறிவித்துள்ளார்.

(ஒ-8)

# நிதி ஒதுக்கீடு

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் பிரமாண அடிப்படையிலான மாற்றுத் திட்ட வேலைகளை மேற்கொள்வதற்கென 2 லட்சத்து 755 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலம் குடாநாட்டில் உள்ள பிரதேசசபைகளின் ஊடாக வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சனசமூக நிலையம், பொதுக் கிணறுகள், முன்பள்ளிகள், விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு, நூல்நிலையத்துக்கான நூல்கள் கொள்வனவு என்பவற்றுக்கே மேற்படி நிதி பயன்படுத்தப்படவுள்ளதாக உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

[இ-10]


# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை, கால், அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர்.

சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்

வேலணை
வைத்திய கலாநிதி
சி இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459

(79975)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது இணையின் காங்கேயன் பேக்கரி உரிமையாளர்
திரு கிருபரட்ணம் பரமகுருநாதன் (குரு)
அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் தம்பிஐயா கிருபரட்ணம்

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

யாழ். மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்.

உடுவில், தெல்லிப்பழை கிளை
அங்கத்தவர்கள்.

(சி/13966)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 | 10 |
| — | — |
| 05 | 12 |
| — | — |
| 1953 | 1999 |

## தில்லைநாதன் கதிர்காமநாதன்

(கனிட்ட நூலகர் யாழ். இந்துக்கல்லூரி)

திதி: 27 - 11 - 2000

ஆனதோ ஓராண்டு என்றும்
அகலாது உம் நினைவு.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

மனைவி, தாய்,
சகோதரி, சகோதரன்

இல. 7, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்

(80905)

# முதலாமாண்டு நீங்காத நினைவு



## அமரர் ஏரம்பு பூபாலசிங்கம்

(இளைப்பாறிய உத்தியோகத்தர் L.D.D திணைக்களம்)

| தாய்மடி | தெய்வ அடி |
|---|---|
| 04—04—1938 | 10—12—1999 |

திதி:- 27—11—2000

காலமெல்லாம் எம்முடன் வாழ்வீர்களென
எண்ணி நாமிருக்க
காலன் கவர்ந்து சென்றதேனோ?
இதயத்தில் வீற்றிருக்கும் உங்கள் நினைவலைகள்
ஓராண்டென்ன ஓராயிரமாண்டு சென்றாலும்
எம்மை விட்டு என்றும் அகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

என்றும் உங்கள் நினைவில்
அன்பு மனைவி- லோகமணியும்,
பிள்ளைகளும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(சி/13946)

# உதயன்

## 15 ஆண்டுகளுக்கு முன்னர்......

உதயனுக்கு இன்று பதினைந்தாவது அகவை நிறைவெய்துகிறது.

உதயன் உதித்த காலத்திலும் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்போது அரசுக்கும் தமிழர் தரப்புக்கும் இடையே பெரும் எடுப்பில் போர் நடைபெறவில்லை.

1983 கறுப்பு ஜூலை சம்பவங்களைத் தொடர்ந்து தமிழ் மக்களின் நிலைமை மோசமாகியது. அவர்களில் பலர் தமிழகத்துக்கு — இந்தியாவுக்கு — பெரும் எண்ணிக்கையில் அகதிகளாகச் சென்றனர். அதனை அடிப்படையாக வைத்து இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிக்குள் நுழைவதற்கு இந்தியா செயற்பட்ட காலம் அது.

அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை ஜனாதிபதியுடன் (தீர்வு முயற்சிகளுக்கான) பேச்சுவார்த்தை நடத்திய காலமது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், வடக்கு — கிழக்கு இணைந்த மாநில சுயாட்சி தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று ராஜீவ்காந்தி பஹாமாஸில் வைத்து ஜே. ஆரிடம் வலியுறுத்தி இருந்தார். அதற்குக் குறைந்த திட்டம் எதுவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முடியாது என்று 1985 டிசெம்பர் ஏழாம், எட்டாம் திகதிகளில் ராஜீவ் டாக்காவில் வைத்து ஜே. ஆரிடம் மீண்டும் வலியுறுத்துவார் என்று தகவல்கள் வெளியாகின.

அதனை அடிப்படையாக வைத்து, உதயனின் முதலாது இதழில், ''வடக்கும் கிழக்கும் இணைந்த மாநில சுயாட்சியையே இந்தியா வலியுறுத்தும்'' என்ற செய்தி முன்பக்கத் தலைப்புச் செய்தியாக வெளியிடப்பட்டிருந்தது.

பதினைந்து வருடங்கள் உருண்டோடிவிட்டன. இந்தியாவின் துணையுடன் கொண்டு வரப்பட்ட தீர்வு தமிழர்களுக்குப் பூரண சுயாட்சிக்கு வழி செய்யவில்லை. அதனால் இந்தியாவின் முயற்சியும் தோல்வி கண்டது.

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழர் தரப்புக்கும் —தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் — இடையிலான போர், இரண்டு நாடுகளுக்கு இடையேயான போர் போன்ற வடிவம் எடுத்தது; இப்போது மிகத் தீவிரமடைந்துள்ளது.

தமிழ் மக்களோ அகதிகளாகி, இடம்பெயர்ந்து, அவல வாழ்வு நடத்துவதோடு பல்வேறு அடக்குமுறைகளுக்கும் ஆளாகி உள்ளனர். உயிர், உடைமை இழப்புகளும் அழிவுகளும் அனந்தம்.

போர் நீடிப்பதால், அதனை நிறுத்த முடியாது என்று அரசு அழுங்குப் பிடியாக நிற்பதால் நாட்டில் பேரழிவுகள் இடம்பெற்று வருகின்றன. பொருளாதாரம் நாளாந்தம் நலிவடைந்து போகிறது.

இத்தகைய பின்னணியில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களைத் தொடக்கும் நோர்வே நாட்டின் முயற்சிகள் அரும்பியுள்ள காலகட்டம் இது. தமிழ்மக்களுக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்று முன்னர் இந்தியா கூறியது போல, பிரிட்டன் மற்றும் நாடுகள் இப்போது கூறத்தொடங்கியுள்ளன.

பதினைந்து வருடங்கள் கழிந்த பின்னரும் தமிழர் பிரச்சினைக்கு அவர்களது அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய நியாயமான தீர்வு கிடைக்குமா என்ற கேள்விக் குறியே மிஞ்சியுள்ளது. இம்முறையாவது — இனியாவது — தமிழர்களின் விடிவுக்கு — விடுதலைக்கு — வழிபிறக்கட்டும் என்று பிரார்த்திக்கிறோம் — உதயனின் பிறந்த நாளன்று

# இடம்பெயர்ந்தோருக்கு வீடு அமைக்க

# ஐந்து வருட குத்தகைக்குக் காணிகள்

## யாழ். அரச அதிபர் பிரதேச செயலர்களுக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம், நவ. 27

இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு 5 வருட குத்தகை அடிப்படையில் பிரதேச செயலர்கள் தமது பிரிவுகளில் காணிகளைப் பெற்றுத் தர வேண்டும்.

இவ்வாறு யாழ் அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் பிரதேச செயலர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி தொடர்பான மீளாய்வு கலந்துரையாடலிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது அவர் மேலும் கூறியதாவது:

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கு வீடுகள் அமைப்பதற்குரிய அரச காணிகள் எங்கும் இல்லை.

அரச காணிகள் குளங்களாகவும், வீடுகள் அமைப்பதற்கு வசதியற்ற காணிகளாகவும் காணப்படுகின்றன.

எனவே பிரதேச செயலர்கள் தனியாருக்குச் சொந்தமான காணிகளை ஐந்து வருடக் குத்தகைக்குப் பெற்றுத் தர வேண்டும். இதற்குரிய குத்தகைப் பணம் வடக்கின் மீள் குடியமர்வு அதிகாரசபையினால் வழங்கப்படும்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம், மாகாண சபை, பிரமாண அடிப்படையிலான ஒதுக்கீடு, திணைக்கள ஒதுக்கீடு, வடக்கின் மீள் குடியமர்வு அதிகார சபை போன்ற ஐந்து வகையான நிதிகள் இங்குள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டன.

இந்த வருடத்துக்கான வேலைத்திட்டங்கள் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் செய்து முடிக்கப்பட வேண்டும். இந்த வருடத்துக்கான நிதி கடந்த ஜூலை மாதத்திலே தான் கிடைத்தது. அதுவும் முழுமையாகக் கிடைக்கவில்லை.

வடக்கின் மீள்குடியமர்வு அதிகார சபையினால் முப்பது கோடி ரூபாவும் பிரமாண அடிப்படையிலான நிதியில் 4 கோடி 10 லட்சம் ரூபாவும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த நிதிக்கான வேலைத் திட்டங்கள் முடிக்கப்பட்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்குகள் முடிக்கப்படவேண்டும் என்று திறைசேரி அறிவித்துள்ளது.

அடுத்த வருடத்துக்கான வேலைத் திட்டங்கள் இப்பொழுதே தயாரிக்கப்பட வேண்டும். அடுத்த வருடத்துக்கு மிகக்கூடுதலான நிதி யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்படவுள்ளது.

கல்வி, மின்சாரம், போக்குவரத்து போன்ற துறைகள் உட்பட பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கும் கூடுதலான நிதியை ஒதுக்க முடியும்.

தேவைகளை இனம் கண்டு முன்னுரிமை அடிப்படையில் திட்டங்களைத் தயாரித்தல் வேண்டும்.

யாழ் மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களை மேம்படுத்தும் பொருட்டு வடக்கின் மீள்குடியமர்வு அதிகாரசபையின் உதவிப் பொது முகாமையாளர் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ளதுடன் வடக்கின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் அலுவலகப் பணிகளும் இங்கே விஸ்தரிக்கப்படவுள்ளன.

இவ்வருடம் ஒதுக்கப்பட்ட நிதியில் கிடைக்கின்ற மீதிப் பணம் இடம் பெயர்ந்தவர்களுக்கான வீட்டுத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும். இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-5-6)

# ஆளணி விவரம் திரட்டப்படுகிறது

அரியாலை, நவ. 27

கூட்டுறவுச் சங்கங்களின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணித் திரட்டுக்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் எஸ்.கே. சண்முகநாதன் கூட்டுறவுச் சங்கங்களைக் கேட்டுள்ளார்.

கூட்டுறவுப் பணியாளர்களின் புதிய சம்பளத் திட்டத்தை அமுல்படுத்துவது சம்பந்தமாகவே கூட்டுறவுச் சங்கங்களின் அங்கீகரித்த ஆளணி விவரங்கள் திணைக்களத்தால் கோரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-17)

# தொழில் பயிற்சி நெறி

வேலணை, நவ. 27

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகமும் தீவக கல்வி வலயமும் இணைந்து நடத்தவிருக்கும் பாடசாலையில் இருந்து விலகிய மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணியிலிருந்து பிற்பகல் 2-30 மணி வரை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தீவக இளைஞர் சேவை அலுவலர் தலைமையில் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறி ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் ரி. சிவதெட்சணாமூர்த்தியும் கௌரவ விருந்தினராக புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் யேசுதாஸ் அடிகளாரும் கலந்துகொள்ள உள்ளனர்.

இந்தப் பயிற்சி நெறிக்கான மாணவர்கள் தீவக கல்வி வலயத்துக்கு உட்பட்ட 3 கல்விக் கோட்டங்களிலுமுள்ள உயர்தர பாடசாலையில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

[இ-167]

# மரணதண்டனை மீண்டும் அமுலுக்கு!

கொழும்பு. நவ. 27

இலங்கையில் மரணதண்டனை வழங்கும் முறை மீண்டும் நடைமுறைக்கு வரவுள்ளது.

இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை கடந்த வாரம் வழங்கியதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அமைச்சரவையின் வாராந்தக் கூட்டம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்றது

நாடு பூராகவும் குற்றச் செயல்கள் அதிகரித்துவருவதை அடுத்து அவற்றைத் தடுத்து நிறுத்த மரணதண்டனை வழங்கும் முறை மீண்டும் அமுல் செய்யப்படவேண்டும் என்று அமைச்சர்கள் பலரும் இந்தக் கூட்டத்தில் கேட்டுக் கொண்டனர்.

## மாணவர்களுக்கு அழைப்பு

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் தரம் 9 இல் இந்த ஆண்டு கல்விக் கற்றுத் தற்பொழுது இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களது கணிப்பீட்டுப் புள்ளிகளைப் பூர்த்தி செய்து பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்ப வேண்டி இருப்பதாகவும்—

ஆகவே குறிப்பிட்ட மாணவர்களை கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதவித்தியாசாலையில் தம்மைச் சந்திக்குமாறும்— மகேஸ்வரி வித்தியாசாலை அதிபர் கே. சண்முகலிங்கம் கேட்டுள்ளார், (இ-10)

## முறைப்பாடு

குறிகாட்டுவான் இறங்குதுறையில் பயணிகள் தங்குவதற்கான தங்குமிட வசதி எதுவும் அமைக்கப்படவில்லை.

தீவுப் பகுதிகளுக்குச் செல்வதற்காக குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு வரும் பயணிகளும், தீவுப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்காக குறிகாட்டுவான் வருவோரும் இதனால் பெரும் அவதியுறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பயணிகள் தங்குவதற்கென கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட கட்டடம் சேதமடைந்து உள்ளது.

[ஐ-7]

## நாளை

கார்த்திகை 13

செவ்வாய்க்கிழமை

திதி: துதியை

முற்பகல் 7-33 வரை

நட்சத்திரம்: மூலம்

முன் இரவு 9-52 வரை.

சுபநேரம்: 10.43—12.13

ராகுகாலம்: 3.13—4.43

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# போரில் காணாமற்போனோரில் 1,680 பேர் பற்றிய தகவல் இல்லை

## படையினரின் பெற்றோர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 27

வடக்கு — கிழக்குப் பகுதிகளில் யுத்தம் ஆரம்பமான காலம் முதல் ஆனையிறவு இராணுவ முகாம் வீழ்ச்சி அடைந்தது வரையான காலப் பகுதியில் காணாமற்போனவர்களில் ஆயிரத்து 680 பேருக்கு என்ன நடந்தது என்பது குறித்துத் தகவல் எதுவும் இல்லை என்று காணாமற்போன படையினரின் பெற்றோர் சங்கத் தலைவர் ஈ. பி. நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து அறிந்து கொள்வதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பினருடன் நாம் பேச்சு நடத்த வேண்டி உள்ளது. இந்தப் பேச்சுக்களில் இருந்து பெற்றுக் கொள்ளும் தகவல்களின் அடிப்படையிலேயே இந்த ஆயிரத்து 680 பேருக்கும் என்ன நடந்தது என்று முடிவு செய்யக் கூடியதாக இருக்கும்.

இதேவேளை—

இக்காலப்பகுதியில் காணாமற்போன தமிழர்களில் 75 இளைஞர்கள் பாதுகாப்புப் படையினரின் விசாரணைகளில் இருந்துள்ளனர். அதனைக் கண்டு பிடித்து பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு அவர்களை விடுவித்து அவர்களது உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளோம்,

வவுனியாவில் காணாமற் போன 15 தமிழ் இளைஞர்கள் தொடர்பாக படையினருடன் பேசி அவர்கள் இருக்கும் இடங்களை அறிந்து அவர்களது உறவினர்களுக்கு தகவல் கொடுத்துள்ளோம்.

இருப்பினும் இந்த ஆயிரத்து 680 பேர் தொடர்பாகவும் படையினர் வசம் எந்தத் தகவலும் இல்லை. இவர்களில் முப்படையைச் சேர்ந்தவர்களும், சிங்கள, தமிழ், முஸ்லிம் சிவிலியர்களும் அடங்கி உள்ளனர். எனவே இவர்கள் தொடர்பாக இனிப் புலிகளுடனேயே பேச வேண்டும். அதற்கான முயற்சிகளில் எமது சங்கம் ஈடுபட்டு வருகின்றது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-4)

# பிரதேச சபைக் கட்டடம் இடிந்து விழும் நிலையில்

காரைநகர், நவ. 27

காரைநகர் மேற்குப் பிரதேச சபை உப அலுவலகமும் நூலகமும் இயங்கி வரும் கட்டடம் இடிந்துவிழும் அபாய நிலையில் உள்ளன. தொடர்ந்து பெய்து வரும் மழையினால் பிரதேச சபைக் கட்டடத்துக்குள் வெள்ளமும் நிறைந்துள்ளது.

இதனால் இங்கு வரும் பொதுமக்களும், வாசகர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதுடன் அங்கிருந்து நூல்களையோ, பத்திரிகைகளையோ வாசிக்க முடியாத நிலையில் உள்ளனர். அத்துடன் இந்தக் கட்டடத்துக்குள் இருந்து கடமையாற்றுவதற்குப் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் அஞ்சுகின்றனர்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை உப அலுவலகமும் இக் கட்டடத்திலேயே இயங்குவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-73)

## உதயவாக்கு

செல்வங்களைப் பயன்படுத்த அஞ்சுபவன் அவற்றைப் பெற்றிருக்கத் தகுதியற்றவன்.

—பிளாடஸ்—

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இலக்கியக் கட்டுரைகள்

நாடகம் எழுதும் போட்டிகளில் ஐந்து முறை முதலாம் பரிசு பெற்ற அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல். 10-11ஆம் தரங்களில் தமிழ் இலக்கியம் கற்கவும், கற்பிக்கவும் உதவக்கூடிய 38 கட்டுரைகள். (80820)

## திருத்துதல்

மூக்குக் கண்ணாடி - ஒட்டுதல், சகலவித கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ்கள் ஆகியன திருத்திக் கொடுக்கப்படும். க. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி (மேல் மாடி) - கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (தவிர்க்க முடியாத காரணத்தால் திருத்த வேலை சில தினங்களாக நடைபெறவில்லை.) (80785)

## பிரத்தியேக வகுப்புகள்

**A/L** தமிழ், இந்து நாகரிகம் மற்றும் உயர்தர வகுப்புகளுக்கான சமஸ்கிருதம் சிறப்பாகக் கற்பிக்கப்படும். ப.சிவானந்தசர்மா **B.A.(Hons)** (கோட்டாசி சிவம்), கந்தசாமி கோயில் தெற்கு வீதி, இணுவில். (80740)

## பொருளியல்

பணம், பொதுப் பொருளாதாரம் 2000 **A/L** பரீட்சை வினாவிடை மற்றும் நூல்கள் யாழ்ப்பாணம், நெல்லியடி, சுன்னாகம் ஆகிய இடங்களில் விற்பனையாகின்றன. ஆசிரியர் வே.கருணாகரன். (80914)

## வீடு விற்பனைக்கு

நெல்லியடியில் வதிரிச்சந்தி, திக்கம் வீதியில் வதிரி உல்லையம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள யாழ். நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஒழுங்கையில் சுந்தரலிங்கம் விதானையாரின் வீட்டுக்கு அருகில் இரண்டு பரப்பு காணியுடன் சேர்ந்த புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: சுந்தரலிங்கம் விதானையார், ஆடுபவத்தை, வதிரி, கரவெட்டி. (80878)

## விற்பனைக்கு

**England** தயாரிப்பான **INCUBATOR** (கோழிக்குஞ்சு பொரிக்கும் சாதனம்), அதற்குரிய பெட்டி, முட்டை வைக்கும் தட்டு, புதிய **(CHINA)** மெயிலின் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தி.திருக்குமரன், வழக்கம்பரை வீதி, தொல்புரம் கிழக்கு. (80866)

## வாங்கிவிட்டீர்களா?

2001ஆம் ஆண்டில் உங்களுக்கு நடக்கப்போகும் பலாபலன்களை அறிந்து கொள்ள வேலணை சோதிடர் V.A.சிவராசா வெளியிட்ட "2001ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி" என்று கேட்டு வாங்குங்கள். எங்கும் விற்பனையாகின்றது. 152B, அரசடி றோட், கந்தர்மடம். (80917)


**I.B.S**

கோயில் வீதி, (I.C.R.C. அருகில்)

புதிய கல்வியாண்டு 2001

DECEMBER 8ல்

தரம் 4 முதல் O/L வரையும்

புதிதாக இணையும்

மாணவர்களுக்கு கட்டணத்தில் சலுகை.

இறுவரை DEC.10வரை

தரமான ஆசிரியர்கள்

உயர்வான கல்வி


## ரூ. 2 ஆயிரம் கொடுப்பனவு பெறாதோருக்கு!

அனர்த்தங்கள் காரணமாக அண்மையில் நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கடந்த 21ம், 22ம் திகதிகளில் 2000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்ட போது அதனைப் பெறாதவர்கள் இன்று திங்கள் கிழமை தொடக்கம் யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் கொடுப்பனவைப் பெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக நல்லூர் உதவிப் பிரதேச செயலர் எஸ்.வேன்புருசோனப்பிள்ளை தெரிவித்தார்.

கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் கிராம உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் நல்லூர் பிரதேச செயலகத்திடமிருந்து பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு அனுமதிக் கடிதத்தினைப் பெற்று இன்று தொடக்கம் வங்கியில் கொடுப்பனவை பெற்றுக் கொள்ள முடியும். (ஐ-180)

# குடும்பஸ்தர் கொலை தொடர்பாக நான்கு சிப்பாய்கள் கைது!

மட்டக்களப்பு,நவ.27

மட்டக்களப்பு மாவட்டம் - சித்தாண்டியில் கடந்த ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி இளம் குடும்பஸ்தர் ஒருவர் தலை துண்டிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சித்தாண்டி இராணுவ முகாமைச் சேர்ந்த நான்கு சிப்பாய்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அருணாசலம் சந்திரமோகன் (வயது 22) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே சித்தாண்டிப் பகுதியில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

மேற்படி படுகொலை சம்பவத்தை நேரில் கண்டதாக பொன்னுத்துரை சந்திரகுமார் (வயது 14) என்ற சிறுவன் அளித்த வாக்குமூலத்தை அடுத்தே இந்த சிப்பாய்களை தாம் கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தப் படுகொலை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என மேலும் நான்கு சிப்பாய்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும்-

இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளவர்களில் இருவர் இராணுவத்தை விட்டு விலகிவிட்டனர் என்றும்-

இன்னொருவர் இராணுவ நடவடிக்கை ஒன்றில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றார் எனவும்-

மற்றைய இராணுவச் சிப்பாய் விடுமுறையில் சென்று விட்டார் எனவும்-

பொலீஸார் அறிவித்துள்ளனர்.

சித்தாண்டி இராணுவ முகாமைச் சேர்ந்த வன்னியாராச்சி சனத்குமார, டிக்கிரி கருணைதாஸ, விதான ஆராச்சி, பந்துல சரத்குமார ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை-

மேற்படி சிப்பாய்கள் நால்வரும் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டனர். எதிர்வரும் 29ஆம் திகதி வரை மேற்படி சந்தேக நபர்களை இராணுவப் பொலீஸாரின் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் அன்றையதினம் மட்டக்களப்பிலுள்ள 233ஆவது படைத் தலைமையகத்தில் நடைபெறவுள்ள அடையாள அணிவகுப்பில் அவர்களை ஆஜர் செய்யுமாறும் உத்தரவிட்டார். (ஐ-7-21)

## சமுர்த்தி ஊக்குவிப்பாளருக்கு நிரந்தர நியமனம்

அண்மையில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான நிரந்தர நியமனத்தை உறுதிப்படுத்தும் கடிதங்கள் ஏற்கனவே யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

யாழ். மாவட்டத்தில் கிராம அலுவலர்களுக்கு உள்ள 55 வெற்றிடங்களை சமுர்த்தி தரம் Iக்கு பதவி உயர்வு பெற்றவர்களைக் கொண்டு நிரப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# கைதான ரெலோ உறுப்பினர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்

வவுனியா,நவ.27

வவுனியா செட்டிகுளம் பகுதியில் அமைந்துள்ள ரெலோ அமைப்பின் முகாமில் வைத்துப் படையினரால் கைதுசெய்யப்பட்ட 13 பேரில் 9 ரெலோ உறுப்பினர்கள் உட்பட 11பேர் கடந்த வியாழனன்று வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியனின் உத்தரவின் பேரில் தலா ஐயாயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நீதிமன்ற அமர்வின்போது சந்தேக நபர்கள் 13 பேரும் செட்டிகுளம் பொலீஸாரால் மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா ஆஜரானார்.

ரெலோ அமைப்பின் ஏனைய ஆயுதங்களையும் உடனடியாகப் பொலீஸாரிடம் ஒப்படைக்குமாறு தனது தீர்ப்பின்போது நீதிவான் உத்தரவிட்டார்.

ஆயுதங்கள் அனைத்தும் முதல் நாளே ஒப்படைக்கப்பட்டு விட்டன என சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார். (இ-8)

## பணிப்பாளர் நியமனம்

கொழும்பு,நவ.27

சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஜயந்த ஜெயசிங்க அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் முன்னர் முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரியாகக் கடமையாற்றினார். (ஐ)

# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

குறிப்பு:- இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறியவந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| 25.11.2000 (சனிக்கிழமை) வரை கிடைத்த நிதி:- | ரூபா |
|---|---|
| முன்கொண்டுவரப்பட்டது | - 935,720 |
| 1. திருமதி ஜெயமலர் தர்மபாலன் நினைவாக - ஓர் அன்பர், உரும்பிராய் | - 500 |
| 2. யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அங்கத்துவ நிறுவனங்கள் | - 6,000 |
| 3. யாழ். சாவகச்சேரி இந்துக்கல்லூரி | - 5,929 |
| 4. விளானை சனசமூக நிலையம் - காரைநகர் | - 250 |
| 5. வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி புலோலி | - 5,050 |
| 6. அதிபர், ஆசிரியர்கள் யா/கம்பர்மலை அ.த.க. பாடசாலை - வல்வெட்டித்துறை | - 1,000 |
| 7. ஓர் அன்பர் - தனது தந்தையின் நினைவாக கலட்டி அம்மன் கோயிலடி | - 400 |
| 8. மாணவர்கள் - கலட்டி அம்மன் கோயிலடி | - 430 |
| 9. பத்திரிகைத்துறையை நேசிப்பவர் - மாதகல் | - 205 |
| 10. அம்பாள் பக்தன், சுதுமலை | - 101 |
| 11. அன்னை மேரி கிறேஸ் கிறிஸ்ரோபர் நினைவாக ஓர் அன்பர், சென்பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம் | - 500 |
| 12. யாழ். புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி சார்பில் | - 3,500 |
| 13. திருமதி இராஜம்மா, புத்தூர் | - 500 |
| 14. மாவட்ட வைத்தியசாலை, ஊர்காவற்றுறை | - 2,275 |
| 15. அதிபர், ஆசிரியர்கள், கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம் | - 1,000 |
| 16. ACADEMY OF ORIENTAL MARTIAL ARTS யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, அச்சுவேலி, மானிப்பாய். | - 5,000 |
| மொத்தம் | 968,360 |

# 94 ஆவது அகவையில்

(27-11-2000)



## திருமதி சின்னம்மா நமசிவாயம்

(மலாயன் ஓய்வூதியர்)

நூற்றாண்டு காலம் நோய் நொடியின்றி வாழ விளிசிட்டி ஞானவைரவக் கடவுளை வேண்டுகிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
நந்திகா (பேர்த்தி)

*'இந்திர கிரி'*
*இரும்பு மதவடி,*
*கரவெட்டி.*

(80800)

# விண்ணக வாழ்வின் 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 22 - 03 - 1923



விண்ணில் 27 - 11 - 1990

## அமரர் பொன் ஐயம்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர், வலந்தலை, காரைநகர்)

'நானே உயிர்த்தெழலும் ஜீவனுமாயிருக்கிறேன்
என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்'
(யோவான் 11-25)

என்றும் மாறா நினைவுடன்
- குடும்பத்தினர்.

*12, இராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

(80910)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



லயன்
**சி.ந.கதிர்வேல்**
(J.P.)
(காப்புறுதி அமைப்பாளர்)

24-11-2000 அன்று யாழ்.மாவட்ட நீதிபதி K.T. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு அவரது பொதுப்பணி மேலும் சிறப்புறப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**திரு.க.வாமதேவன்** (G.S)
**திருமதி யோ.வாமதேவன்**
(முகவர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

(80916)

# வாசகர் உள்ளங்களிலிருந்து...

## உதயன் எனும் வேந்தே வாழ்க!

சொல்லுகின்ற சேதியெல்லாம் சுவையாய்ச் சொல்லிச்
சோதனையும் வேதனையும் சேர்ந்தே தாங்கி
அல்லலுறும் தமிழ்க் குடிகள் அவலம் போக்கி
அவர் நிலத்தில் உரிமையெல்லாம் அடைந்தே வாழ
நல்ல பல கருத்துரையோ டறமும் கூட்டி
நயமுடனே பதினைந்தாண்டுகளாய் நல்கி
வெல்லரிய பணி பலவும் விரைந்தே ஆற்றும்
வித்தகனே! உதயனெனும் வேந்தே! வாழ்க.

- சிற்பி -

## இன்பத் தமிழை அள்ளி வீசு!

ஆண்டது பதினைந்தை எட்டி
அரும்பிடும் அழகுப் பாவாய்
இன்று நீ பூப்பெய்தி விட்டாய்
இதனால் உன் கவர்ச்சி ஓங்கும்
கண்டவர் வியந்தார் அன்று
கன்னிகை ஆனாய் இன்று
உன்தனை அணைத்துக் கொஞ்ச
உலகத்தார் விரும்பாரோ! சொல்.

தமிழ்தனை அமிழ்தம் என்பார்
தனக்கிணை அற்ற தென்பார்
அமிழ்தமாம் தமிழைச் சிந்தும்
அழகினுக் அழகானாய் அன்றோ
கமழ்ந்திடும் தமிழர் பண்பை
காத்திடும் செல்வி நீயே!
இமியளவும் சோர்ந்திடாது
இன்பத் தமிழினை அள்ளி வீசு

கனிதரு சுவையை மற்று
கற்கண்டு பாகை வெல்லும்
இனிமையை சுரக்கும் செல்வி
இணையிலா தமிழர் சொத்து
அணியென தமிழர் மானம்
அறமென தமிழர் வீரம்
பணியென தமிழ் பண்பாட்டைக் காக்கும்
பாவையே வாழ்க நீடு!

மு.திருநாவுக்கரசு
(ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி)

## எங்கள் உதயன்

இருள் சூழ்ந்த வாழ்வுக்கு
ஒளி நல்கும் சூரியனே....
கொடு மேகம் அன்று
உனை மறைத்த அராஜகத்தால்
விழி வடித்த நீர்க் கடலில்
அமிழ்ந்த உலகம்....உன்
துணிவுக்கு விருது தந்து
மகிழ்ந்த வரலாறு கண்டோம்!
அகவை பதினைந்து
ஆயினும் நீ....
ஆற்றி வந்த தமிழ்ப் பணியில்
உலகை மிகக் கொண்டான்
உலகேற்றும் தமிழனங்கான்...
இதயங்கள் வாழ்த்தும்....
இகம் புகழும்.....தினம்...... நாளை
உதயன் பெயர் சொல்லி
உயர்ந்து நிற்கும் இலக்கியங்கள்....
எங்கள் தமிழ் மண்ணில்
எரிகின்ற பெரு நெருப்பை
பொங்கி எழும் உன் குரலே
சங்காரம் செய்யும்...! நீதி....
தாங்காமை.... கல்வி.....
துணிவு...... தமிழ் மண்ணில்
ஓங்கி வளர... என்றும் நம்
உதயனொழி சிந்தும்......!

- நெடுந்தீவு லக்ஷ்மன் -

## உதயனே நீ வாழ்க

யாழ் மண்ணின் உதயமே!
காலச் சூரியனாகி
மண் வாசனை பூசிய
தமிழ் மக்கள் இதயமே!
விலங்குகள் சூட்டி மறைக்க இயலாத
காலைக் கதிரவனே!
எம் தேச நெஞ்சங்களின்
பார்வைக் குரலே!
பல்லாண்டு வாழ்க.
காலைத் தென்றல் தரும்
சுகத்தைவிட - உன்னைக்
கரங்களில் தழுவுதலை முதலில்
விரும்பும் மனசு.
நீ
நீயாக இருப்பதால் தான்
நீடூழி வாழ்கின்றாய்!
தாயும் சேயுமாய்
தமிழ் மக்களோடு
உறவு கொண்டாய்.
நீ
வாழ்தல் போதும்
நாம் வாழ்வதை
உறுதிப்படுத்த.

- சி.சிவானி -

# தரம் 9 க்கான ஆண்டு இறுதி கணிப்பீட்டுப் பரீட்சைகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கான தரம் 9க்கான ஆண்டு இறுதிக் கணிப்பீட்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாக விருக்கின்றன என்று பரீட்சைச் சபைத் தலைவரும், வடமராட்சி வலயப் பணிப்பாளருமான சி.சிவராசா தெரிவித்தார்.

புதிய கல்வி மறு சீரமைப்புக்கு அமைய தரம் 9 மாணவர்களுக்கு விவர அறிக்கை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இவ்வாண்டு முதல் வழங்கப்படவிருக்கின்றது.

இவ்வாண்டு இடம்பெற்ற பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையிலும் -

மாவட்ட நிலையில் இடம்பெறும் ஆண்டு இறுதிக் கூட்டுப் பரீட்சையின் அடிப்படையிலும் - இந்த விவர அறிக்கை வழங்கப்படவிருக்கின்றது.

பின்வரும் நேர சூசிகையின்படி தினமும் காலை 9 மணிமுதல் பரீட்சை இடம்பெறும். பரீட்சை இடம்பெறும் தினமும் பாடமும் வருமாறு:-

* 30-11-2000 - தமிழ் மொழி (முதலாம் மொழி)
* 1.12.2000 - கணிதம்
* 2.12.2000 - விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்
* 4.12.2000 - சமூகக் கல்வியும் வரலாறும்
* 5.12.2000 - ஆங்கிலம், சமயம்.
* 6.12.2000 - அழகியற்கலை, சுகாதாரமும் உடற்கல்வியும். (இ-3)

## அடிக்கல் நாட்டும் நிகழ்வு

வட்டு மத்திய கல்லூரியில் புதிய மனையியல் கூடம் ஒன்றை அமைப்பதற்காக அடிக்கல் நடும் வைபவம் கல்லூரி அதிபர் சிவஞானபாதன் தலைமையில் இடம் பெற்றது.

வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என் திரிலோகநாதன் கட்டத்துக்கான அடிக்கல்லை நாட்டினார்.

இந்தக் கல்லூரியில் பிரார்த்தனை மண்டபம் ஒன்றை அமைத்துத் தரும்படி அங்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அடுத்த வருடத்துக்குரிய பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் கீழ் பிரார்த்தனை மண்டபம் கட்டுவதற்கு கீழ் இரண்டரை லட்சம் ரூபா ஒதுக்கித் தருவதற்கு திரிலோகநாதன் அங்கு உறுதியளித்தார். (உ-3)

# தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் போராட்டம் தொடர்கிறது

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவனான இராசையா சிறிரங்கநாதனை விடுதலை செய்யுமாறுகோரி அந்தக்கல்லூரி பகல்நேர மாணவர்கள் நடத்தும் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்றும் இடம்பெற்றது.

இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டம் இன்றும் தொடரும் என்று கல்லூரி மாணவர் மன்றம் அறிவித்துள்ளது. (இ-3-5)

# ரெலோ எம்.பி. செல்வம் பிரதமருடன் சந்திப்பு

வடக்கு - கிழக்குத் தமிழர்கள் எதிர் நோக்கும் பல்வேறு நெருக்கடிகள் குறித்து தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவைச் சந்தித்துப் பேசினார்.

நாடாளுமன்றத்தில் பிரதமரின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் ரெலோவின் செயலாளர் அடியூகப்பும் பங்குபற்றினார்.

யுத்தம் காரணமாக தமிழ்ப் பேசும் மக்கள் அனுபவிக்கும் பல்வேறு கஷ்டங்கள் குறித்துப் பிரதமரிடம் எடுத்துக்கூறப்பட்டது.

மன்னாரில் இருந்து தலைமன்னாருக்கு ஒரு தடவையில் பத்துக் கிலோவுக்கு மேல் அரிசியும் -

வன்னியில் இருந்து ஏனைய பகுதிகளுக்கு ஒருவர் பத்தாயிரம் ரூபாவுக்கு மேல் பணமும் - கொண்டுசெல்ல முடியாத வகையில் பாதுகாப்புக் கெடுபிடிகள் இறுக்கப்பட்டுள்ளன.

- இவ்வாறு ரெலோப் பிரமுகர்கள் பிரதமருக்குச் சுட்டிக்காட்டினர்.

வடக்கு - கிழக்கு மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பாக தாம் சுட்டிக்காட்டி விடயங்களுக்கு உடனடித் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகப் பிரதமர் தம்மிடம் உறுதியளித்தார் என்று செல்வம் அடைக்கலநாதன் இந்தச் சந்திப்பின் பின்னர் தெரிவித்தார். (உ-3)

# தலையீடுகளுக்கு எதிர்ப்பு: வெளிநாடுகளில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு ஜே. வி. பி. முடிவு

கொழும்பு,நவ.27

இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட வேண்டாம் எனக் கோரி மேற்கு நாடுகளின் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்த ஜே.வி.பி. ஏற்பாடு செய்து வருவதாகத் தெரியவருகிறது.

அடுத்துவரும் வாரங்களில் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட உள்ளன.

இதேவேளை -

இலங்கை உள்நாட்டு விவகாரம் தொடர்பாக கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதர்களை நேரில் சந்தித்து விளக்கவும் ஜே.வி.பி. அமைப்பினர் முடிவு செய்துள்ளனர்.

நோர்வே, பிரிட்டன் போன்ற ஏகாதிபத்திய நாடுகளால் இலங்கையில் சமாதானம் மலரப் போவதில்லை என்று ஜே.வி.பி. கூறியுள்ளது. (ஐ-20)

# தமது கோரிக்கை நிறைவேற மகேஸ்வரன் காலக்கெடு

கொழும்பு,நவ.27

வடக்குக்கான விமானக் கட்டணக் குறைப்பு மற்றும் எரிபொருள் விலைக்குறைப்பு உட்பட மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கு எதிர்வரும் 5ஆம் திகதி வரை காலக்கெடு விதித்துள்ளார் யாழ். மாவட்ட ஐ.தே.கட்சி நாளுமன்ற உறுப்பினர்தி.மகேஸ்வரன். நாடாளுமன்றத்தில் கடந்த வியாழனன்று ஒத்திவைப்பு நேரத்தில் ஜே.வி.பி. சமர்ப்பித்த பிரேரணை ஒன்றின் மீது பேசுகையிலேயே அவர் இந்தக் காலக்கெடுவை விதித்துள்ளார்.

மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்ற அரசு முன்வராவிட்டால் இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்வரும் 5ஆம் திகதி நாடாளுமன்றத்திற்கு தமிழ் எம்.பிக்கள் மாட்டு வண்டியில் வருவர் என்றும் திரு.மகேஸ்வரன் தனது உரையில் தெரிவித்தார். மகேஸ்வரனின் உரைக்குப் பதில் அளித்து உரையாற்றிய எரிபொருள் மின் சக்தி பிரதி அமைச்சர் பீரிஸ் பெரேரா வடக்குக்குச் செல்லும் கப்பல்களுக்கான கட்டணங்கள், பாதுகாப்பு செலவீனம் ஆகியவை காரணமாக எரிபொருள் விலையைக் குறைக்க முடியா துள்ளது என்று கூறினார். (8-3-8)

## உனக்கென ஓர் இடம்...

அகவை பதினைந்தைப் பூர்த்தி செய்யும் உதயனே!
உன்னதமான உன் பணியினை
உறுதியுடன் உலகிற்களிப்பவனே
உன் உரிமை தனை நிலைநாட்டி
உண்மைகளின் நிலைப்பாடாய் ஒலித்திடும் உதயனே!
உனக்கென ஓரிடம் வையத்துள் உள்ளதென
தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து தன்மானத்துடன் கூறிட
வாழ்க உன் சேவை வளர்க இவ் வையத்துள்!

ந.சதாசிவ ஐயர்
(காணிப் பதிவாளரும்,
மேலதிக மாவட்டப் பதிவாளரும் - யாழ்ப்பாணம்)

## சிப்பாய் உயிரிழப்பு

கொழும்பு,நவ.27

நாகர்கோயில் பகுதியில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது கடந்த வெள்ளியிரவு 8.45 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார் என்றும் நான்கு சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும் விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

## பதில் பாது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைத் தம்மிடம் வைத்திருக்கும் ஜனாதிபதி, வழமையாக நாட்டைவிட்டு வெளியே செல்லும்போது அந்தப் பொறுப்பை பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் ஒப்படைத்துச் செல்வதே நடைமுறை.

ஆனால் தற்போதைய புதிய அரசில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு இன்னமும் எவரையும் ஜனாதிபதி நியமிக்கவில்லை.

இந்த அரசின் கடந்த ஆட்சிக் காலத்தில் - ஜனாதிபதி நாட்டில் இல்லாத வேளைகளில் அப்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவே பதில் பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றி வந்தார்.

ஆனால் இப்போது - பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு யாரும் நியமிக்கப்படாத நிலையில் - தாம் நாட்டைவிட்டு வெளியே செல்லும்போது அமைச்சரவையில் தமக்கு அடுத்த சிரேஷ்ட நிலையில் உள்ள பிரதமரிடம் அந்தப் பொறுப்பை ஜனாதிபதி ஒப்படைத்துச் சென்றுள்ளார்.

இது, பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக எவரையும் இப்போதைக்கு நியமிப்பதில்லை என்ற முடிவுக்கு ஜனாதிபதி வந்துள்ளார் என்பதையே காட்டுவதாக அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அத்தோடு -

பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக எவரையும் நியமிக்காமல் ஒருபுறம் யுத்த நடவடிக்கைகளையும் மறுபுறம் பேச்சுவார்த்தை விவகாரங்களையும் தாமே நேரடியாகக் கையாள்வதையே ஜனாதிபதி விரும்புகின்றார் என்பதையும் இது காட்டுவதாகக் கூறப்படுகிறது.

பதில் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு பிரதமரான தம்மிடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து -

அமைச்சர்களைப் பதவிப் பிரமாணம் செய்துவைக்கும் அதிகாரமுள்ள நாட்டின் தலைவரான ஜனாதிபதி நாட்டில் இல்லாத காரணத்தாலும் -

அதற்கு அடுத்து அந்த அதிகாரத்தைக் கொண்டுள்ள பிரதமர் பதவியைத் தாமே வைத்திருப்பதாலும்-

அந்த வரிசையில் அடுத்து அவ் அதிகாரத்தைக் கொண்டுள்ள சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா முன்னிலையில் கடந்த வெள்ளியன்று பதில் பாதுகாப்பு அமைச்சராக ரத்னசிறி விக்கிரமநாயக்க சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இதன் மூலம் தாய் (முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க), மகள் (ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க), மகன் (சபாநாயகர் அனுரா பண்டார நாயக்க) ஆகிய - ஒரே குடும்பத்தைச் சேர்ந்த - மூவரின் முன்னிலையில் அமைச்சராகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டவர் என்ற பெயரைத் தற்போதைய பிரதமர் பெற்றுள்ளார் என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

# யாழ்.ரயில் நிலையத்திலேயே கப்பல் பயணிகளுக்கு டிக்கெட்

யாழ்ப்பாணம்,நவ.27

காங்கேசன்துறையில் இருந்து நாளை புறப்படவிருக்கும் 'லங்கா முடித்த' கப்பல் மூலம் திருகோணமலை செல்லும் பயணிகளுக்கு இன்று காலை முதல் யாழ்.ரயில் நிலையத்தில் வைத்து பயணச்சீட்டுகள் விநியோகிக்கப்படவிருக்கின்றன என்று யாழ் சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

சிங்கள மகாவித்தியாலயத்தில் வைத்து பயணச்சீட்டு வழங்கும் பணி இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது என்றும் -

ஆனால் பாதுகாப்புக் காரணங்களுக்காக அது இடம் மாற்றப்பட்டுள்ளது என்றும் -

சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஏற்கனவே பயண அனுமதிப் பத்திரம் பெற்றவர்கள் ஆகியோருக்கு முதலில் பயணச்சீட்டு வழங்கப்படும் என்றும் -

அதன் பின்னர் ஏனையோருக்குப் பயணச்சீட்டு வழங்கப்படும் என்றும்-

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபையின் அதிகாரி எஸ்.குகராஜன் தெரிவித்தார்.

அதேசமயம் -

விமானப்பயணிகளுக்கு பயணச்சீட்டு வழங்கும் பணி சிங்கள மகா வித்தியாலயத்தில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# உ.த. பரீட்சை முடிவுகள் இன்று இங்கு கிடைக்கும்

யாழ்ப்பாணம்,நவ.27

கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இருந்து தோற்றிய மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று விமானம் மூலம் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படுகின்றன.

பெறுபேறுகள் இங்கு வந்ததும் உடனடியாகவே பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அடுத்த சில தினங்களில் வெளியிடப்படும் என பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.(உ-3)

# பல்கலைக்கழக அனுமதிக்கு 50 வீதமானவர்கள் தகுதி

கொழும்பு,நவ.27

கடந்த ஓகஸ்ட்டில் இடம்பெற்ற ஜி.சீ.ஈ(உயர்தர) பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஐம்பது வீதமானவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகுதியைப் பெற்றுள்ளனர் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சையில் ஒரு லட்சத்து 83 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றினர் என்றும்-

இவர்களில் 91 ஆயிரம் பரீட்சார்த்திகள் பல்கலைக்கழகங்களில அனுமதிக்கப்படுவதற்கான அடிப்படைத் தகைமையைப் பெற்றுள்ளனர் என்றும்-

மேலும் தெரிவிக்கப்பட்டது.

மூன்று பாடங்களுடன் பொது அறிவுப் பரீட்சையில் தோற்றியவர்களில் 51 ஆயிரம் மாணவர்களும்-

நான்கு பாடங்களுக்குத் தோற்றியவர்களில் 40 ஆயிரம் மாணவர்களும்-

பல்கலைக் கழக அனுமதிக்கான அடிப்படைப் புள்ளிகளைப் பெற்றுள்ளனர் என்று பரீட்சை ஆணையாளர் ஏ.எம்.ஆர்.அமரக்கோன் தெரிவித்தார்.

அதேசமயம்-

விடைத்தாள்களை மீள் மதிப்பீடு செய்வதற்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

பரீட்சை முடிவுகளை 'இன்ரநெற்' மூலம் பார்வையிட வசதி செய்யப்பட்டுள்ளது என்றும் -

WWW.EWISL.com என்ற இணைய முகவரியுடன் தொடர்புகொண்டு முடிவைப்பெறலாம் என்றும் -

அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-6)


இன்றைய
வீடியோ CD வெளியீடு
அருண்குமார், மீனா, ரம்பா, ஆனந்தராஜ், தாமு,சார்லி, வையாபுரி
நடிப்பில்
அன்புடன்
(திரையரங்குகளுக்கு முன்னுரிமை)
மூர்த்தி வீடியோ
மானிப்பாய் (C/13994)
T.P.No.: 2884


## பிரபாவின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துடன் ஆரம்பமாகின்றது.

மாவீரர்தின உரை அவர் உரையாற்றிய கையோடு இன்ரநெற்றிலும் பிரசுரமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இன்று அனுஷ்டிக்கப்படும் மாவீரர் தினத்தை ஒட்டி மட்டக்களப்பு, வன்னி ஆகிய மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் பல்வேறு எழுச்சி நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியுள்ளன.

தேசியக் கொடியேற்றம், அஞ்சலி நிகழ்வுகள், மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு போன்ற நிகழ்ச்சிகள் அங்கு இடம்பெற உள்ளன.

மாலையில் மாவீரர் துயிலும் இல்லங்களில் உள்ள கல்லறைகளில விசேட அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெறும்.

இன்று காலை முதல் பொதுமக்கள் சிரமதானப் பணிகளிலும், அஞ்சலி நிகழ்வுகளிலும் ஈடுபடுவர்.

இன்றைய தினத்தை பொது விடுமுறை தினமாக விடுதலைப் புலிகள் பிரகடனம் செய்துள்ளனர். (உ-3-8)

## குடாநாட்டில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.27

இன்று அனுஷ்டிக்கப்படும் மாவீரர் நாளை ஒட்டி வலிகாமத்தில் சில இடங்களில் மாவீரர் தினச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. சில இடங்களில் மாவீரர்தின பதாகைகளும் காணப்பட்டன.

மாவீரர் தினத்தையொட்டி துண்டுப பிரசுரங்களும் சில பகுதிகளில் விநியோகிக்கப்பட்டன. (உ-3)

# நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(26-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தக் தொகை ரூ 969,871

# சுதந்திரம் கிடைக்கும் வரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தை எங்களால் கைப்பற்ற முடியுமா? என்று நீங்கள் கேட்டுள்ளீர்கள். இந்தக் கேள்விக்கு நேரடியாகப் பதிலளிக்க முன்னர் வன்னிப் பெரு நிலப்பரப்பில் நிலை கொண்டிருந்த ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு ஏற்பட்ட கதியைப் பற்றிக் குறிப்பிடுவது பொருத்தமானது. பல மாத காலம் ஆரவாரமாக மேற்கொள்ளப்பட்ட இராணுவத் திட்டங்களுக்குப் பின்னர் வன்னியில் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களுக்கு என்ன நிகழ்ந்தது என்பதும் உங்களுக்குத் தெரியும். சந்திரிகாவுக்கும் அவருக்கு உதவுவோர்களுக்கும் இது புரிவதாக இல்லை; அவர்கள் புரிய விரும்புவதாகவும் இல்லை. வன்னியில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆரவார இராணுவ ஆக்கிரப்பின் இறுதி முடிவு பல ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களின் உயிரிழப்பும் அங்கவீனமாக்கலும் மற்றும் இலங்கை மக்கள் மீது பொருளாதாரச் சுமை சுமத்தப்பட்டதும்தான்.

யாழ்ப்பாணத்தின் நுழை வாசலான ஆனையிறவு, இயக்கச்சி, பளை ஆகியவற்றில் ஆயிரக்கணக்கில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரின் கதி என்னவாயிற்று என்பதை நான் விவரிக்கத் தேவையில்லை என நினைக்கின்றேன். பேராசை கொண்ட அரசியல்தனத்துக்காக சிங்கள இளைஞர்கள் இரையாகும் துன்பியல் நிகழ்வுகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

இதற்காக சிங்கள நாடு யதார்த்தத்துக்காக எழுந்து நின்று அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழவேண்டும்.

எவ்வளவு செலவிலும் ஆட்சியில் இருப்பதற்காக இந்த அரசு மனிதப் பேரழிவைக் கவனத்தில் கொள்ளாது இராணுவத்தினரை பொறிக்குள் தள்ளிவிடுகிறது. இந்த அடக்குமுறை ஆட்சிக்கு முடிவுகாண விரும்பும் சிங்கள நாடு இந்த அரசின் தலைமைத்துவத்தை நிச்சயமாக வெறுத்து ஒதுக்கும்.

யாழ்.குடாநாட்டிலுள்ள களநிலை யதார்த்தங்களை ஆய்வு செய்வீர்களானால் அதிலிருந்து உங்கள் கேள்விக்கான விடை கிடைக்கும்.

***கேள்வி:*** பொதுத் தேர்தலுக்குப் பின்னர் அரசு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் தமிழ்க் கட்சிகள் தீர்மானிக்கும் சக்தியாக உருவாகின. ஈ.பி.டி.பி. காரணமாகவே இந்த அரசு இன்று நிலைத்துள்ளது. இதனை நீங்கள் எந்த நோக்கில் பார்க்கின்றீர்கள்?

***பதில்:*** ஆரம்பத்திலிருந்து தொடர்ச்சியாகவே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை எதிர்க்கும் சக்தியாக ஈ.பி.டி.பி. இருந்து வருகிறது. சுயநலத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செல்வம் திரட்டும் ஒரு குழுவே அவர்கள். எந்தப் பெரும்பான்மைக் கட்சி தம்மைப் போஷித்தாலும் அக்கட்சியை அவர்கள் மண்டியிட்டு ஆதரிப்பார்கள். அத்தோடு மோசடி முறையில் நாடாளுமன்றுக்குள் நுழைந்தவர்கள்தான் அவர்கள். அதனால் நாம் கருத்து ஏதும் கூறுவதற்கு உரியவர்கள் அல்லர் அவர்கள்.

***கேள்வி:*** ஜனாதிபதி சந்திரிகா ஒரு கண்ணை இழந்ததிலும், அவரைக் கொல்ல முனைந்ததிலும் விடுதலைப்புலிகளுக்குத் தொடர்புள்ளதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது. அப்படியிருந்தும் அவர் சமாதானத்துக்காகத் தனது கைகளை நீட்டியுள்ளார். அவரை வரவேற்க நீங்கள் தயாரா? அவரை நீங்கள் நம்புவீர்களா?

***பதில்:*** அரசியல் இரட்டை முகத்தைக் காட்டும் வஞ்சகப் போக்கை ஜனாதிபதி தொடர்ந்து பேணிவந்துள்ளார். அவரது ஆட்சிக் காலம் பொய்யும், சூழ்ச்சியும் நிறைந்தவையாக நாம் கருதுகிறோம், ஆகவே அவரது இப்போதைய நிலை, இனி நடக்கும் நிகழ்வுகளின் பாதையில் பரீட்சிக்கப்பட வேண்டியவையாக உள்ளன.

***கேள்வி:*** உங்கள் தலைவர் உயிரிழக்கும் நாளுடன் இந்த இனப்பிரச்சினையும், யுத்தமும் அணைந்து விடுவது தவிர்க்க முடியாதது என்று கூறப்படுவதை நீங்கள் நம்புகின்றீர்களா?

***பதில்:*** அடக்கப்பட்டு இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படும் ஒரு நாட்டு மக்களை வழி நடத்துவதற்கு ஒரு தலைவர் உருவாகுவது ஒரு வரலாற்றுக் கட்டாயம். எங்கள் தலைவரும் அத்தகைய உருவாக்கமே. அத்தகைய தனி ஆளை அழிப்பது அரசியல் பரிமாணத்திலிருந்து போராட்டத்தை ஒழித்துவிடும் முடிவைத் தந்துவிடாது. சுதந்திரத்தை எங்கள் மக்கள் அடையும்வரை விடுதலைப் போராட்டமும் தொடரும்.

***கேள்வி:*** சமாதான சூழ்நிலை ஏற்படுவதற்கு மோதல் நிறுத்தம் அவசியம் என்று கருதுகிறீர்களா?

***பதில்:*** சமாதானத்துக்கான பாதைக்கு வன்முறை மற்றும் இராணுவ ஆக்கிரமிப்பு இல்லாத ஒரு தகுந்த சூழ்நிலை முன் அவசியமாகும். சமாதானத்தை அடைவதற்கான கருவியாக யுத்தத்தை முன்வைக்கத் தீர்மானித்தவர்கள் யாரோ, அவர்கள் தான் அதனை முதலில் அகற்ற வேண்டும். அதன் பிறகே, அதன் பிறகு மட்டுமே சமாதானத்தை அடைய முடியும்.

***கேள்வி:*** யுத்தத்துக்கு மத்தியில் சமாதானப் பேச்சுக்களை நடத்த உங்கள் அமைப்பு இணங்குமா?

***பதில்:*** மோதல்கள் தவிர்க்கப்பட்டு, ஒரு நாட்டு மக்கள் மீதான பொருளாதாரத் தடை நீக்கப்பட்டு, மக்கள் மத்தியில் அமைதி நிலவினால் மட்டுமே நிரந்தரத் தீர்வு முயற்சிகள் வெற்றி பெறமுடியும்.

***கேள்வி:*** வெளிநாட்டில் சமாதானப் பேச்சுக்களை நடத்த நீங்கள் இணங்குவீர்களா?

***பதில்:*** சமாதானத்தை அடைவதற்கு நேர்மையுடன் உண்மையான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்படுமானால் இந்த விடயத்தில் சாதகமாக முடிவெடுப்பதை எமது தலைவர் பரிசீலிப்பார்.

***கேள்வி:*** எங்கள் ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ அலுவலகத்தினுள் சிறையிலிருக்கும் நிலைதான். உங்கள் தலைவர் கூட இத்தகைய சிறை நிலையில்தான். அடுத்தவரின் ஆளணியால் ஆபத்தை, மிரட்டலை இருவருமே எதிர்நோக்குகின்றனர். அப்படியானால், மற்றவர்களின உயிர்களைப் பாதுகாப்பது குறித்து எங்கள் ஜனாதிபதியும் உங்கள் தலைவரும் ஒரு மேசையில் இருந்து உரையாடுவது எப்படி?

***பதில்:*** ஜனாதிபதி அலரி மாளிகையில் சிறை வைக்கப்பட்டுள்ளாரா? அல்லது தனது மனச்சாட்சியின் வழிகாட்டல் காரணமாகத் தன்னைத் தானே சிறைவைத்துள்ளாரா? இந்த இரண்டில் எது சரி என்பதை அறிய நாம் விரும்புகிறோம், ஸ்ரீலங்கா ஜனாதிபதி போல் அல்லாது எங்கள் தலைவர் மக்களுடனும் விடுதலைப் புலிகளுடனும் உள்ளார். அவர் போராட்டத்தை நெறிப்படுத்துவதோடு மக்களின் விடுதலைக்கான வழியில் விடுதலைப் போராளிகளை வழிநடத்துகிறார். ஜனாதிபதிக்கு உள்ளது போன்ற ஆடம்பர வசதிகள் எங்கள் தலைவரிடம் இல்லை என்பது உண்மைதான் என்றாலும் அதனால் அவர் சிறையில் இருப்பதாக அர்த்தமல்ல. எங்கள் அண்மைக்கால இராணுவ வெற்றிகளும், அரசியல் நகர்வுகளும் எங்கள் தலைவரின் நேரடி நெறிப்படுத்தலில் கிட்டியவை. இந்த நிகழ்வுகளை நீங்கள் முற்றாக உணர்ந்திராமல் இருப்பது ஆச்சரியமே. ஸ்ரீலங்கா ஜனாதிபதியும் தமிழ்த் தேசியத் தலைவரும் ஒன்றாக இருந்து பேசும் நாள்தான் சிங்கள, தமிழ் சாகிய மக்களுக்கு மகிழ்ச்சியான நாள் என நான் கருதுகிறேன். தாங்கள் அடக்குமுறை மேற்கொள்வதாக அடக்கு முறையாளர்கள் உணரும் போது தான் அது சாத்தியம் - என்றார். (உ-8)


இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்
யாழ்ப்பாணம்

இலங்கையில் சிமெந்து உற்பத்தியில் நீண்ட கால அனுபவமும் புதிய தொழில்நுட்பமும் கொண்ட சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து (புத்தளம்,காலி)

செவன (SEVENA)
இலங்கைத் தரம் S.L.S - 107
பிரித்தானிய தரம் B.S - 12
சங்ஸ்தா (SANSTHA)
இலங்கைத் தரம் S.L.S -107
பிரித்தானிய தரம் B.S - 12
சர்வதேச தரம் I.S.O - 9002 - 1994

ஆகிய சிமெந்துகள் எம்மால் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.
* மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.
சில்லறை விலை ரூபா 540/-
16mm, 20mm முறுக்குக் கம்பிகளும் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
விற்பனை அதிகாரி,
65, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/13971)



உ
-சிவமயம்
உங்கள் எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்யும் வண்ணம்
எங்களால் தருவிக்கப்பட்ட இந்தியன் பெட்சீட் வகைகளும்
(100% பருத்தியிலான) (60 x 90)
மலிவான விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.
மற்றும்
ஒறிஜினல் 65 x 35 (பொலியஸ்ரர்) மீற்றர் விலை ரூபா 50/-
* உங்கள் எண்ணம் போலவே வண்ண வண்ண டிசைன்களில்
* கண்ணைக் கவரும் பல வர்ண சாறிகள் மற்றும்
* வீட்டுப்பாவனைக்குரிய கொட்டன் சாறி வகைகள்
* ஸ்கேட் & பிளவுஸ் வகைகள் * கவுன் வகைகள்
* ஆடவருக்கேற்ற விலை உயர்ந்த தரமான சேட்டிங், சூட்டிங்
* ரெடிமேற் சேட், ரி-சேட் வகைகளும் * சிறுவர்களுக்கான பேபி சூட் வகைகளுக்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்.
து.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
T.P.: 2985
44, 42 , பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(80876)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.